# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 196 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 09ஆம் திகதி வியாழக்கிழமை (23.03.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 30, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## புனித நோன்பு மாதம் நாளை ஆரம்பம்!



ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் எப்பாகத்திலும் தென்படாததையடுத்து, ஷஃபான் மாதத்தை 30 நாட்களாக பூர்த்தி செய்து, புனித ரமழான் முதல் நோன்பை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிக்க முடிவு எட்டப்பட்டுள்ளது.

ஹிஜ்ரி 1444, ரமழான் மாதத்தின் தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

## உஷ்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற பங்காளிக்கட்சிகளில் இருக்கும் அரசியல் பிரமுகர்கள் பலர் மீண்டும் தமிழரசுக்கட்சியுடன் இணைந்து பணியாற்ற தயாராகி அது தொடர்பான பேச்சுகளை நடத்தி வருகின்றனராம்.

வீராவேச பேச்சுகளை பேசி வெளியில் வந்தாலும் தேர்தல் நடவடிக்கைகளில் முறையாக இயங்காமையால் பங்காளிக்கட்சிகளுக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.



# நான் வீழ்ந்தாலும் நாடு வீழாது!

### சவாலை ஏற்று அதில் வெற்றியும் கண்டதாக ரணில் சபையில் அறிவிப்பு

- ★ உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் 7 பில்லியன் டொலர் துரித கடன் உதவி எதிர்பார்ப்பு
- ★ இலங்கையில் இதுவரை இல்லாத புதிய நிதிக் கலாசாரம் மற்றும் ஊழலற்ற சூழல் உருவாக்கப்படும்
- ★ எதிர்கால செலவு மதிப்பீட்டை கணக்கில்கொண்டு, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணத்தை மறுசீரமைக்க நடவடிக்கை
- ★ எரிபொருள் விலை நிர்ணயம் செய்வது அரசியல் அதிகார மட்டத்தில் இருந்து முற்றாக நீக்கப்படும்
- ★ தீர்மானிக்கப்பட்ட இலக்குகளின்படி, மத்திய வங்கி வெளிநாட்டுக் கையிருப்புகளை அதிகரிக்க வெளிநாட்டு நாணயம் கொள்வனவு

(ஜனாதிபதியின் முழுமையான உரை 5ஆம் பக்கத்தில்)



## லிஸ்ட்ரியோசிஸ் நோய் தாக்கமில்லை

### விசேட அறிவிப்பு வெளியானது



நா.தினுஷா

சிவனொளிபாத மலை வழிபாட்டுக்குச்சென்று நோய் நிலைமைக்கு உள்ளாகி, உயிரிழந்தவர்களில் ஒருவரே லிஸ்ட்ரியோசிஸ் என்ற நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் உயிரிழந்த ஏனைய இருவரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

02 பக்கம்

## பாடசாலை மாணவர் சீருடை, புத்தகங்கள் இன்று வழங்கப்படும்

இரண்டாம் கட்ட பாடசாலை சீருடைகள் இன்று (23) விநியோகிக்கப் படவுள்ளதாக கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதனடிப்படையில், 4.1 மில்லியன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களுக்கு சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஏப்ரல் விடுமுறைக்கு முன்னர் இந்த விநியோக நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

முதல் கட்டத்தில் சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சீருடைகள் 70வீதமான மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன.

இதனிடையே, பாடசாலை பாடப் புத்தக விநியோகம் இன்று(23) முதல் ஆரம்பமாகவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

## சர்வதேச நாணய நிதிய திட்டத்திற்கு பொதுமக்கள் ஆதரவளிக்கவேண்டும்

### இலங்கை வர்த்தக சம்மேளனம்

The Ceylon Chamber of Commerce

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு பொதுமக்கள் ஆதரவளிக்கவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்கள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை சாதகமாக பார்க்கவேண்டும். அதேவேளை, சீர்திருத்த நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிக்கவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையால் தொடர்ந்தும் மானியத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார முறைமையை தொடர்ந்தும்...

02 பக்கம்

## இலாபமீட்டும் நிறுவனங்களை தனியாருக்கு விற்பது ஏன்?

### ரணிலிடம் விளக்கம் கோருகிறார் விமல்



ஆளுந்தரப்பிலுள்ளவர்களை போன்ற முட்டாள்கள் இங்கு இருக்கிறார்கள் என்று சர்வதேச நாணய நிதியத்திலுள்ளவர்கள் அறிந்தால் ஐந்து சதம் கூட கொடுக்க மாட்டார்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

மேலும், ஸ்ரீலங்கா ரெலிகொம் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் போன்ற...

02 பக்கம்

## ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை ஆராய்ந்து எமது நிலைப்பாட்டை அறிவிப்போம்!

### சஜித் பிரேமதாச அறிவிப்பு



நாணய நிதியத்தின் பரிந்துரைகளை இரகசியமாக கலந்துரையாடிவிட்டு உதவி தருமாறு கோரினால், அதற்கு ஒத்துழைப்பு வழங்க நாங்கள் முட்டாள்கள் இல்லை. மேலும், இந்த அறிக்கையை வாசித்து விட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய...

02 பக்கம்

## சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிப்பேன்!

### குமார வெல்கம எம்.பி. சபையில் பகிரங்க அறிவிப்பு



நா.தினுஷா

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு வழிகாட்டலுக்கு யார் ஆதரவு வழங்காவிட்டாலும் நான் ஆதரவளிப்பேன். தற்போதுள்ள நிலையில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டியதே அவசியமாகும். எனவே, இதனூடாக அதிகபட்ச பயனை...

02 பக்கம்

## ஹஜ் யாத்திரைக்கான விசா பெறுவதில் அநீதி செயற்பாடா?

### முறையிடக் கோருகிறார் அமைச்சர் விதுர



புனித ஹஜ் யாத்திரைக்காக வெளியிடப்படும் விசா கடந்த வருடங்களை போன்று விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும், யாராவது அவ்வாறான அநீதி செயற்பாட்டுக்கு உள்ளானால் அதுதொடர்பில் உடனடியாக அமைச்சுக்கு அறியத்தருமாறும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய பக்தர்களுக்கான சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஹஜ் குழு அதிகாரிகள் குழுவொன்று, இஸ்லாம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

வீழ்வது நானாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் எண்டு கலைஞர் சொன்னத பின்பற்றித்தான் ரணிலும் புதுசா சொல்லியிருக்கிறார்..



## ஆசிரியர் இடமாற்றங்கள் இடைநிறுத்தம்; கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



அரச பாடசாலைகளில் ஆசிரியர் இடமாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் ஆகியவற்றினால் நேற்று கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிதியமைச்சு, ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை...

02 பக்கம்

## தேர்தலில் போட்டியிடும் அரச பணியாளர்களுக்கு நிவாரணம்

### டலஸ் அலகப்பெரும ஜனாதிபதிக்கு கடிதம்



நா.தினுஷா

உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்காக வேட்பு மனுத்தாக்கல் செய்து, வருமானம் இன்றி நிர்க்கதியாக்கப்பட்டுள்ள அரச பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு வழங்கப்படவேண்டும் என்றும், அவர்களின் கடன் தவணைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறுகோரியும் சுதந்திர மக்கள் கூட்டணியின் தலைவர் டலஸ் அலகப்பெரும, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரச தரப்பினருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

02 பக்கம்

# வடக்கில் மாணவர்கள் இன்மையால் 103 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

## அதிர்ச்சித் தகவல் வெளியானது

வடக்கு மாகாணத்தில் போர் முடிவடைந்த பின்னரான 14 ஆண்டுகள் காலப்பகுதியில் மாணவர்கள் இன்மையால் 103 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 49 பாடசாலைகளும், கிளிநொச்சியில் 8 பாட சாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 10 பாடசாலைகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் 34 பாடசாலைகளுமே இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. வவுனியாவில் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலேயே இந்த எண்ணிக்கை உயர்வாகப் பதிவாகியுள்ளது என்றார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் அ.உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கில் எந்தவொரு பாடசாலையும் நிரந்தரமாக மூடப்படவில்லை. வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கூறிய 103 பாடசாலைகளும் தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளன. மாணவர் பற்றாக்குறை காரணமாகவே இவை மூடப்பட்டுள்ளன. இதற்கு இடப்பெயர்வுகள், நகர்ப்புற பாடசாலைகளின் வளர்ச்சி, நகரமயமாக்கல், சனத்தொகை பற்றாக்குறை எனப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பால் இன்று சில பாடசாலைகளில் புதிதாகக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. மறுபுறம் சில பாடசாலைகள் மூடப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளின் வளர்ச்சியும் இதற்குக் காரணம். பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சில இடங்களில் மக்கள் இல்லை.

சில இடங்களில் நகரமயமாக்கல் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இது குறித்து நாம் அவதானம் செலுத்துகின்றோம். முறைப்படியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை எமது தரப்பில் நாமும் முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளோம். தற்காலிகமாகப் பாடசாலைகளை மூடுவது எமது விருப்புமல்ல. போதிய எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தருவார்களாயின் நிச்சயமாக பாடசாலைகள் மீள ஆரம்பமாகும்-என்றார்.

## சர்வதேச நாணய நிதியத்தின்...

பெற்றுக்கொள்வதற்காக சகலரும் முன்வர வேண்டும் என்று புதிய இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம நேற்று (22) சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான விசேட விவாதத்தின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு முயற்சிகளை எடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் இந்த உதவியை பெற்றுக்கொண்டதனை இட்டு எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். நான் என்றால் இந்த செயற்பாட்டுக்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குகிறேன்.

திருடர்களை பற்றி தொடர்ச்சியாக பேசுகிறோம். ஆனால், ஒருபோதும் அந்த திருடர்களை பிடித்தது இல்லை. அதற்கு காரணம் ஆளுந்தரப்பு, எதிர்த்தரப்பு என இரு தரப்புகளிலும் திருடர்கள் இருக்கிறார்கள். 30 வருடங்கள் இந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாலே இதனை கூறுகிறேன். திருடர்களை பிடிக்கப்போவதும் இல்லை. ஒருவரை பிடித்தால் தொடர்ச்சியாக ஒவ்வொருவராக வெளிவருவார்கள். பணத்தை கொள்ளையடித்தவர்கள் இந்த நாட்டிலும் இல்லை.

எனவே, தற்போது இந்தத் திட்டத்துக்கு நாம் சகலரும் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். ஜனாதிபதியால் நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியாது என்று சகலரும் கூறினார்கள். பல்வேறு சர்ச்சைகளை தோற்றுவித்தார்கள். இருந்தபோதும் ஜனாதிபதி அந்த உதவியை பெற்றுகொடுத்துள்ளார். இதனூடாக அதிகபட்ச நன்மைகளை பெற்றுக்கொண்டு, நாட்டுக்காகவும் எதிர்கால சந்ததியினருக்காகவும் பேசுவதற்கு சகலரும் முன்வர வேண்டும் என்றார்.

## தேர்தலில் போட்டியிடும்...

பிரதமர் தினேஷ் குணவர்தன, மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா, தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க மற்றும் சுயாதீன தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் ஆகிய பிரிவினருக்கு கிடைக்கும் வகையில் இந்த கடிதம் நேற்று முன்தினம் (21) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் கடந்த 09ஆம் திகதி இடம்பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்காக 3ஆயிரத்துக்கும் அதிகமான அரச மற்றும் அரை அரச பணியாளர்கள் வேட்புமனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த அரச பணியாளர்களில் சிலர், ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட 48 கட்சிகள், சுயாதீனக்குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கிறார்கள்.

அதற்கமைய, இவர்கள் சகலருக்கும் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் ஏப்ரல் 25ஆம் திகதி வரை தேர்தலை ஒத்திவைக்க தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருந்தாலும் அது தற்போது, தினம் குறிப்பிடப்படாத, பொறுப்பற்ற அரச அறிவிப்பாகவே மாறியுள்ளது.

இந்நிலையில், வீட்டுக்கடன் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு இவர்கள் கடன் தவணைகளை செலுத்தி வருகிறார்கள். அந்த பின்னணியில் இந்த அரச பணியாளர்களுக்குரிய அடிப்படைச் சம்பளம் சில மாதங்களாக தடைப்பட்டுள்ளதால் அவர்களின் கடமைகள் வரலாற்று ரீதியாக பாரதூரமான நெருக்கடியை சந்தித்துள்ளது.

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது எல்பிட்டிய பிரதேச சபை மற்றும் தேர்தல் ஒத்திவைப்பின் பின்னர் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையின்போது பின்பற்றப்பட்ட முன்னோடி செயற்பாடுகளின் பிரகாரம், ஜனநாயகத்துக்கான அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆயிரக்கணக்கான இந்தப் பிரிவினர் தொடர்பில் இந்த வாரத்துக்குள் தீர்வை வழங்க வேண்டியது ஜனாதிபதி என்ற அடிப்படையில் உங்களினதும் மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் நம் அனைவராலும் தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

அதன் காரணமாக, அதில் முதல் கட்டமாக, அரச வங்கி மற்றும் நிதி நிறுவனங்களினூடாக அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள கடன் தவணையை தற்காலிகமாக இடைநிறுத்துவது நீதியான செயற்பாடாக இருக்குமென நிதி அமைச்சரான உங்களுக்கு தயவுடன் பரிந்துரைக்கிறோம்.

ஜனநாயகத்துக்காக செய்த அர்ப்பணிப்புக்காக அரசினூடாக பிரஜைகளுக்கு கௌரவமும், மதிப்புமே வழங்கப்பட வேண்டும். அதற்கு மாறாக அவமானத்தை ஏற்படுத்தி கௌரவத்தை இல்லாமல் செய்துவிடக்கூடாது என்று அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலாபமீட்டும் நிறுவனங்களை...

நிறுவனங்களை தனியார் நிறுவனத்துக்கு விற்பதனூடாக எமது அந்நிய செலாவணி நெருக்கடிக்கு உள்ளாகாதா என்பதை நாணய நிதியத்திடம் கேட்டாவது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு விளக்கமளிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு பரிந்துரைகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விசேட விவாதத்தின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடுகளுக்கமைய, கடந்த அமைச்சரவையில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திடம் இருக்கும் அரச பகுதியையும், லங்கா ஹொஸ்பிட்டல்ஸில் ஒருபகுதியை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் ஜனாதிபதி விளக்கமளிக்க வேண்டும்.

நான் கூறுவதை சகலரும் கவனமாக கேட்க வேண்டும். ஊசி குத்தியது போன்று யாரும் குதிக்கக்கூடாது. இலங்கையில், இவர்கள் போன்று முட்டாள்கள் நாட்டில் இருக்கிறார்கள் என்பது நாணய நிதியத்திலுள்ளவர்கள் அறிந்தால் ஐந்து சதம் கூட கொடுக்க மாட்டார்கள். எனது கேள்விக்கு இடமளிக்க வேண்டும்.

நட்டமடையும் நிறுவனங்களையே விற்கப்போவதாக இதற்கு முன்னர் கூறினார்கள். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இலாபம் அடையும் நிறுவனங்களை எதற்காக விற்க முயற்சிக்கிறீர்கள் என்பதை ஜனாதிபதி கூறவேண்டும். இலாபம் பெறும் நிறுவனங்களை விற்கும்போது அதில் கிடைக்கும் வருமானத்தை வெளிநாட்டு நிறுவனங்களே பெற்றுக்கொள்ளும். அவர்கள் அந்த நிதியை ரூபாவிலிருந்து டொலருக்கு மாற்றியே எடுத்துச் செல்வார்கள். அதனூடாக அந்நிய செலாவணி நெருக்கடி ஏற்படுமா? இல்லையா? என்பதை நாணய நிதியத்திடம் கேட்டாவது கூறவேண்டும் என்றார்.

## ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை...

இடங்களில் எங்களின் இணக்கத்தை வெளியிடுவோம். அதேபோன்று இதிலுள்ள ஒவ்வொரு தீர்வுகள் தொடர்பிலும் எடுக்கப்பட்ட பகுப்பாய்வுகளின் அடிப்படைகளை எங்களுக்கு வழங்க வேண்டும். அதன் பின்னர் எங்களின் தீர்மானங்களை நாங்கள் அறிவிப்போம். ஒப்புக்கொள்ள கூடிய இடங்களில் ஆதரவை வழங்குவோம். முடியாத இடங்களை நிராகரிப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (22) சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு பரிந்துரைகள் தொடர்பான விசேட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைப்பு வழிகாட்டலை வாசிக்காமல், ஆராயாமல் அதிலுள்ள சகல விடயங்களையும் ஒப்புக்கொண்டு இணக்கத்தை தெரிவிக்குமாறு ஜனாதிபதி கூறுகிறார். இது சர்வாதிகார நாடு இல்லை என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

2020 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திலிருந்து விலகினார்கள். நாணய நிதியத்துடன் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்வது தேசத்துரோகம் என்றார்கள். உலக வங்கியின் கருத்துகளையும் செவிமடுக்கப் போவதில்லை என்றார்கள். அவ்வாறு கூறி நான்கு வருடங்கள் கூட ஆகவில்லை. நாணய நிதியத்தின் உதவி கிடைத்துவிட்டதாக கூறி பொதுஜன பெரமுன பிரதிநிதிகள் கைதட்டி கொண்டாடுகிறார்கள். அன்று ராஜபக்ஷக்களின் அடிமைகளாக இருந்தவர்கள் இன்றும் நாணய நிதியத்தின் அடிமைகளாகிவிட்டார்கள்.

இதற்கு இணங்குமாறு ஜனாதிபதி கோருகிறார். ஆனால், தற்போதையளவில் சரியான பரிந்துரைகளுக்கு மாத்திரம் நாங்கள் இணங்குகிறோம். நான் மாத்திரமல்ல, பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் நாணய நிதியம், உலக வங்கி, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சகலரையும் சந்தித்து கலந்துரையாடினோம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எங்களுக்கு உதவி வழங்குமாறே கோரினோம்.

கேட்டதும் நாணய நிதியம் பணம் கொடுத்து விட்டது என்று யாரும் கருதக்கூடாது. எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் எங்களால் வழங்கக்கூடிய அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கியுள்ளோம்.

எங்களிடம் உதவி கேட்டபோது சிலர் நல்ல நேரம் பார்த்ததாக ஜனாதிபதி கூறுகிறார். தனிநபராக பாராளுமன்றத்துக்கு வந்து பிரதமராகி ஜனாதிபதியாகவும் பதவி ஏற்றுக்கொண்டுள்ளார். 2022ஆம் ஆண்டு பாராளுமன்றம் ஒன்றுகூடியபோது, ஜனாதிபதி ரணிலுக்கு பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு வாய்ப்பு கிடைத்தது. இருந்தபோதும் 10 மாதங்கள் அவர் பாராளுமன்றத்துக்கு வரவில்லை. 2021, ஜூன் 23ஆம் திகதியே சபைக்கு வந்தார். நல்ல நேரம் பார்த்து யார் வந்தது என்பதை இதனூடாக புரிந்துகொள்ள முடியும். ஜனாதிபதியே நாட்டில் இருக்கும் சிறந்த ஜோதிடர்.

பெசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக இருந்தபோது, அப்போது ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கோரியபோதும் விரும்பாத ரணில் பிரதமரானதும் அந்த நிலைமை தலைகீழாக மாறியது.

220 இலட்சம் மக்களுக்கும் சிறந்த சாதகமான ஒப்பந்தமொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதால் நாங்களும் நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை கோருகிறோம். ஆனால், ஜனாதிபதி ஆளுந்தரப்பு எதிர்த்தரப்பு என இரு தரப்பினருடனும் வெளிப்படையாக கலந்துரையாடி நடவடிக்கை எடுத்தார் என்றால், எம்மால் இதனை விட சிறந்த ஒப்பந்தமொன்றை நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை கோட்டா அரசாங்கமே இடைநிறுத்தியது. அதற்கு பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடைய சகலரும் பொறுப்பு கூற வேண்டும். அவர்களினாலேயே நாடு வங்குரோத்து நிலைக்குள்ளானது.

தக்கவைக்கும் வரி நூற்றுக்கு 5 வீதமாக இருக்கும்போது எம்மால் 9 பில்லியன் ரூபாவை சேர்த்துகொள்ள முடியும். செலுத்தப்படும் வரியினூடாக 100 பில்லியன் ரூபா மாத்திரமே கிடைக்கும். தற்போதாவது இவற்றை மாற்றினால் நாங்கள் எங்களின் ஒத்துழைப்பை வழங்குவோம். நாணய நிதியத்தின் பரிந்துரைகளை இரகசியமாக கலந்துரையாடிவிட்டு உதவி தருமாறு கோரினால், அதற்கு ஒத்துழைப்பு வழங்க நாங்கள் முட்டாள்கள் இல்லை.

மேலும், தனிநபர் வரிக்கு பதிலாக புகையிலை நிறுவனங்களிடம் வரி அறவிட்டு இலாபத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசாங்கத்தால் நாணய நிதியத்துக்கு யோசனை முன்வைத்திருக்க முடியும். இது மாற்று அரசாங்கம். எங்களின் நிலைப்பாடுகளுக்கு செவிசாய்க்க வேண்டும். புகையிலை நிறுவனங்கள் குறித்து பேசும்போது ஒருசிலருக்கு வேதனை ஏற்படலாம்.

தக்கவைக்கும் வரிபோன்ற வரிகள் புகையிலை நிறுவனங்களிடம் அறவிடப்படுவதில்லை. தனியார் துறைக்கான வரியை மாத்திரமே செலுத்துகிறார்கள். உக்ரைனை போன்று இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் விசாரணை செய்ய எமது நாட்டிலும் சுயாதீனக்குழுவொன்று நியமிப்பது ஏற்புடையதாக இருக்கும். இது இதிலிருக்கும் பாரிய குறைபாடாகும். இவற்றை மாற்றுவதற்காக எங்களின் ஒத்துழைப்பை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேபோன்று, பொருளாதாரத்தை சுருக்குவதற்கு பதிலாக, அமைச்சு பதவிகளை குறைத்து அரசாங்கத்தை சுருக்குவது ஏற்புடையதாக அமையும் என்று கருதுகிறோம்.

நாங்கள் முன்வைக்கும் யோசனைகளுடன் நாணய நிதியத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மின் கட்டணத்தை அதிகரிக்காமல் இருந்திருக்க முடியும். நீதியான முறையை பின்பற்றி சாதாரண மக்களின் வாழ்க்கையை அழிக்காமல் மின் கட்டணத்தை அதிகரித்திருக்கலாம். ஆளும், எதிர்த்தரப்புகளைச் சேர்ந்த சகலரும் இதனை செய்திருக்கலாம் ஆனால் அதனை செய்யவில்லை. இவற்றை வெளிப்படையாக பேசவில்லை.

மேலும், இந்த அறிக்கையை வாசித்து விட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய இடங்களில் எங்களின் இணக்கத்தை வெளியிடுவோம். அதேபோன்று இதிலுள்ள ஒவ்வொரு தீர்வுகள் தொடர்பிலும் எடுக்கப்பட்ட பகுப்பாய்வுகளின் அடிப்படைகளை எங்களுக்கு வழங்க வேண்டும். இதனை கொடுத்ததன் பின்னர் சரியான தீர்மானங்களை நாங்கள் எடுக்கிறோம். தவறான விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். தீர்மானங்கள் பற்றிய பகுப்பாய்வு தரவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததும், ஒப்புக்கொள்ளக்கூடிய இடங்களில் ஆதரவளிப்போம். முடியாத இடங்களை நிராகரிப்போம் என்றார்.

## லிஸ்ட்ரியோசிஸ்...

இவ்வாறு சிவனொளிபாதமலை சென்ற மேலும் சிலர் நோய் நிலைமைக்குள்ளாக்கியிருந்த போதும், அவர்களுக்கு இந்த நோயின் தாக்கம் இல்லை என்பதும் மருத்துவ பரிசோதனைகளில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. லிஸ்ட்ரியோசிஸ் என்ற நோய் உணவினால் பரவலடையக் கூடியது என்பதால் குறித்த வீதியிலிருக்கும் உணவகங்களின் உணவு மற்றும் நீர் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அதிலும் லிஸ்ட்ரியோசிஸ் நோய்க்கான வாய்ப்புகள் எதுவும் உறுதிப்படுத்தப்பட வில்லை என்று தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளரும் தலைமை நிபுணருமான வைத்தியர் சமித கினிகே தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

லிஸ்ட்ரியோசிஸ் என்ற நோயினால் ஒருவர் பாதிப்படைந்துள்ளதாக ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டது. இந்த நோய் பக்ரீரியாவினால் தோற்றம் பெறும் நோயாகும். சர்வதேச மட்டத்தில் பார்க்கும்போது இது தொற்று நோயல்ல. உணவினூடாகவே ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு இந்த நோய் பரவலடைகின்றது. இந்த நோயினால் பாதிக்கப்படுபவர்களின் நோய் அறிகுறிகள் அநேகமாக வெளிப்படுவதில்லை. சிலவேளை, கர்ப்பிணித் தாய்மார், புற்றுநோய், சிறுநீரக நோய் போன்ற நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்த நோய் தீவிரத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

உணவை அடிப்படையாகக் கொண்டு பரவலடையும் நோயாகவே இது கருதப்படுகிறது. குறிப்பாக, பால் அல்லது பால் உற்பத்திகளினூடாக இந்த நோய் பரவலடையக் கூடும். மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இந்த நோய் பரவலடைகிறது. இதுதொடர்பில் பயங்கொள்ள வேண்டியதில்லை.

இலங்கையில், பெப்ரவரி மாதத்தின் இடைப்பகுதியில் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் அடையாளம் காணப்பட்டிருந்தார். சிவனொளிபாதமலைக்கு வழிபாட்டுக்குச் சென்ற ஒருவரே இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் வயது முதிர்ந்தவர் என்பதால் அவர் இந்த நோயினால் உயிரிழந்திருந்தார். அவர் லிஸ்ட்ரியோசிஸ் நோயினாலேயே உயிரிழந்துள்ளார் என்பது மருத்துவ பரிசோதனைகளினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சமூகத்தில் அச்சநிலையொன்று தோற்றம் பெற்றது. ஆனால், அதன் பின்னர் இதுவரையில் இந்த நோயினால் பாதிக்கப்படவில்லை. லிஸ்ட்ரியோசிஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதாக மருத்துவ பரிசோதனைகளில் உறுதிபடுத்தப்படவும் இல்லை. இருந்தபோதும், சிவனொளிபாதமலை வழிபாட்டுக்கு சென்ற மேலும் சிலர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள். மேலும் இருவர் உயிரிழந்தும் இருக்கிறார்கள். இருந்தபோதும், அவ்விரு மரணங்களும் லிஸ்ட்ரியோசிஸ் வைரஸினால் உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. அது தவறான செய்தியாகும்.

ஆனால், தொற்று நோயியல் சாட்சிகளின் அடிப்படையிலோ அல்லது பரிசோதனைகளிலோ இவ்விரு உயிரிழப்புகளுக்கும் லிஸ்ட்ரியோசிஸ் நோயினால் சம்பவித்தது என்பது உறுதிபடுத்தப்படவில்லை. இருந்தபோதும் அவர்களின் மரணத்துக்கான காரணத்தை கண்டறிவதற்கான பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

சிவனொளிபாதமலைக்குச் சென்ற மேலுமொருவரும் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு தேவையான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அவரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கான எவ்வித பரிசோதனைகளும் இல்லை.

மேலும், நோய்வாய்ப்புக்குள்ளான சிலருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. உணவினால் இந்த நோய் பரவலடைவதால், முதலாவது நோயாளர் அடையாளங் காணப்பட்டவுடனேயே மாவட்ட சுகாதார திணைக்களத்தினூடாக பரிசோதனைகளை செய்திருந்தோம். குறித்த வீதியில் இருக்கும் உணவகங்களிலுள்ள உணவுகள், நீர் என்பவற்றின் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பரிசோதனைகளுக்கமைய அந்த மாதிரிகளில் லிஸ்ட்ரியோசிஸ் இல்லை என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் குடும்பத்தாரும் பரிசோதனைக்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் லிஸ்ட்ரியோசிஸ் என்ற நோய் நிலை இல்லை என்பது உறுதியாகியுள்ளது என்றார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
081
-
-
1



இறப்பு
1 12
-
2
-
11

## மகாதேவா ராமலிங்கம்

**புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சங்கரியின் அன்புத் தந்தையுமான மகாதேவா ராமலிங்கம் நேற்று 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று 23 ஆம் திகதி 65/1 அலெக்ஸாண்ட்ரா பிளேஸ் கொழும்பு - 7இல் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனம் செய்வதற்காக இல்லத்திலிருந்து மதியம் 12.30 மணிக்கு பொரளை மயானத்திற்கு பூதவுடல் தாங்கிய ஊர்வலம் புறப்படும்.**

**0777236236 (என்.எஸ்.நிஷேந்திரன்)**
**0775351129 (சங்கரி ராமலிங்கம்)**


தேசிய லொத்தர் சபை National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.03.21
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5066 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,870,373.00
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 8 2 1 4 4 6

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3308 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,807,244.80
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 06 07 32 34

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1521 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,076,932.40
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 0 1 2 0 3 0

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1096 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,258,519.60
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 01 62 75 80

ராசி சப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 375 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,821,934.80
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 12 51 54 57 — விசேட இலக்கினம் விருச்சிகம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1414 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 309,372,838.00
ஆங்கில எழுத்து U — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கங்கள் 10 34 37 59
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00


## ஆசிரியர் இடமாற்றங்கள்...

மற்றும் காலிமுகத்திடல் பகுதிகளுக்குள் செல்வதற்கு கோட்டை நீதவான் திலின கமகேவினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோட்டை பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்து நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். போராட்டக்காரர்கள் பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையில் போராட்டத்தில் ஈடுபடலாம் என்றும், எனினும் அவர்கள் கலவரமாகவும் சட்டவிரோதமாகவும் செயற்பட்டால் தண்டனைச் சட்டப் பிரிவுகளின்படி பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் நீதவான் உத்தரவிட்டார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு மேற்குறித்த பகுதிகளில் பேரணியாக செல்லத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையால் சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹஜ் யாத்திரைக்கான...

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

ஹஜ் வழிபாட்டுக்காக நாட்டிலிருந்து வெளியேறும் இஸ்லாமிய பக்தர்களுக்காக அதிகபட்ச சேவையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வழிபாட்டுக்காக வெளியேறும் இஸ்லாமிய பக்தர்களுக்காக தனியான அலுவலகமொன்றை திறந்து சிக்கலற்ற சேவையை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சர்வதேச நாணயநிதிய...

பேணமுடியாது என தெரிவித்துள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம் அரசாங்கம் தான் உறுதியளித்துள்ள சீர்திருத்தங்களிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

பொருளாதாரத்திற்கு இது முக்கியமான தருணம் என நாங்கள் கருதுகின்றோம் என தெரிவித்துள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம், எப்போதோ முன்னெடுத்திருக்கவேண்டிய சீர்திருத்தங்களை முன்னெடுத்தால் அது நிலையான பொருளாதார மறுமலர்ச்சிக்கு முக்கியமான ஒரு உந்துதலாக காணப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

# கெசல்கமுவ ஓயாவிலிருந்து சிசுவொன்றின் சடலம் மீட்பு

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

பொகவந்தலாவை, லொய்னோன் கெசல்கமுவ ஓயாவில் பெண் சிசுவின் சடலம் ஒன்று நேற்று (22) மீட்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் மரக்கறி தோட்டத்தில் தொழில்புரிந்துகொண்டிருந்த நபர் ஒருவர் சிசுவின் சடலம் மிதந்துகொண்டிருப்பதைக் கண்டுள்ளார். இதனையடுத்து அவர் பொகவந்தலாவை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து குறித்த இடத்திற்கு பொலிஸார் வந்துள்ளனர்.

குறித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்ட தடயவியல் பொலிஸார் ஹட்டன் நீதிமன்ற நீதவானின் பணிப்புரைக்கமைய கெசல்கமுவ ஓயாவிலிருந்து சடலத்தை மீட்டுள்ளதுடன், விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிசு ஏழு மாதங்களில் பிறந்த குழந்தையென ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மீட்கப்பட்ட சிசுவின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் அதிகரிக்கும் காசநோயாளர்கள்!

## பரிசோதனைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கிறது சுகாதாரப் பிரிவு

(நா.தினுஷா)

நாட்டில் காச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வருடாந்தம் 8,000–9000 வரையிலான காச நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். அதற்கமைய, உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீட்டை விட குறைந்த எண்ணிக்கையிலான நோயாளர்களே நாட்டில் அடையாளம் காணப்படுவதாகவும், இதன் காரணமாக சமூகத்தில் இனங்காணப்படாத நிலையில், மேலும் நோயாளர்கள் இருக்கலாம் என்று சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேபோன்று, கடந்த வருடம் 8 ஆயிரத்து 342 காச நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தாலும் சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி 14 ஆயிரம் வரையிலான நோயாளர்கள் இனங்காணப்பட்டிருக்க வேண்டும் என்று காசநோய் கட்டுப்பாட்டு மற்றும் மார்பக நோய் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் மருத்துவ நிபுணர் வைத்தியர் மிஷாயா காதர் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்த நோய் நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த காசநோய் கட்டுப்பாட்டு மற்றும் மார்பக நோய் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் பிரதி பணிப்பாளர் வைத்திய நிபுணர் வைத்தியர் கிருபா பல்லேவத்த,

நாளை 24ஆம் திகதி உலக காச நோய் தினமாகும். காச நோய் என்பது உரிய நேரத்தில் முறையான சிகிச்சையை பெற்றுக் கொள்வதனூடாக குணமாக்கிக்கொள்ள கூடியவொரு தொற்றுநோய் நிலைமையாகும். இருந்தபோதும் தற்போதும் இலங்கையில் காச நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். வருடாந்தம் 8,000 – 9,000 வரையிலான நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

அதேபோன்று, இவ்வாறு அடையாளம் காணப்படும் காச நோயாளர்களில் 7 சதவீதமானவர்கள் உயிரிழக்கிறார்கள். அதாவது வருடாந்தம் 500 – 600 நோயாளர்கள் இந்த நோயினால் உயிரிழக்கும் நிலைமையே இருக்கிறது.

எனவே, இந்த நோய் தொடர்பான தெளிவுபடுத்தலை பெற்றுக்கொண்டு, முறையாக சிகிச்சையை உரியநேரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக அமைந்துள்ளது. காச நோய் தொடர்பில் சமூகத்தில் அச்ச நிலை நிலவுகின்றது. நாடுபூராகவும் 160இற்கும் மேற்பட்ட சிகிச்சை மற்றும் பரிசோதனை மத்திய நிலையங்கள் இருக்கின்றன. தனக்கு காச நோய் ஏற்பட்டுள்ளதென்று சந்தேகிக்கும் நபரொருவர் இந்த நிலையங்களினூடாக பரிசோதனைகளை மேற்கொள்ளலாம். அதேபோன்று, நோய் நிலைமை தொடர்பில் குறுகிய காலத்தில் அறிக்கைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளும் 30இற்கும் மேற்பட்ட பரிசோதனை நிலையங்களில் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்.

வைத்தியர் மிஷாயா காதர் குறிப்பிடுகையில்,

2022ஆம் ஆண்டு இலங்கையில் 8 ஆயிரத்து 342 காச நோயாளர்கள் பதிவாகியுள்ளார்கள். உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீட்டின்படி, இலங்கையில் ஒரு இலட்சத்துக்கு 63 வீதமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். ஆனால், 2022ஆம் ஆண்டு ஒரு இலட்சத்துக்கு 36.6 வரையிலானவர்களே அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இவ்விரு மதிப்பீடுகளிலும் வேறுபாடு இருக்கிறது. அதற்கமைய, 14 ஆயிரம் பேர் வரையிலான காச நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 8, 000 பேர் வரையிலேயே பதிவாகியிருக்கிறார்கள். 5,800 வரையில் வித்தியாசம் இருக்கிறது. எனவே, இன்னும் எமது நாட்டில் அடையாளம் காணப்படாத காச நோயாளர்கள் இருக்கலாம். இது பெரும் அச்சுறுத்தலாகும்.

மேல்மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அடையாளம் காணபட்டிருக்கிறார்கள். மொத்த நோயாளர்களில் 46 வீதமானவர்கள் மேல்மாகாணத்தை சேர்ந்தவர்களாவர். அவர்களில் 26 சதவீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்படும் 50 சதவீதமான நோயாளர்கள் அதாவது ஆயிரம் பேர் கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆண்களே இந்த நோயினால் அதிகம் பாதிக்கப்படுவதுடன், 15 வயதுக்கும் குறைவான சிறுவர்களில் 188 பேர் வரை அடையாளம் காணப்படுகிறார்கள் என்று தெரிவித்தார்.

# நீதித்துறையை அவமதிக்கும் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவு!



நீதித்துறையின் கண்ணியம் மற்றும் அதன் முன்வருகையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்த கூட்டறிக்கையில் கையொப்பமிட்டனர்.

பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பில் வரலாறு காணாத நெருக்கடியை நாடு தற்போது எதிர்கொண்டுள்ளதோடு, இத்தகைய சூழ்நிலைக்கு எதிரானதோர் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் ஆரம்பமாக இந்த கையொப்பமிடுதல் நிகழ்வு இடம்பெற்றது.

# தங்க விலை 10 ஆயிரம் ரூபாவால் குறைப்பு



நாட்டில் ஓரேநாளில் தங்க விலை பத்தாயிரம் ரூபாவால் குறைவடைந்துள்ளது.

இன்று கொழும்பு செட்டியார் தெருவில் 24 கரட் தங்கம் ஒரு பவுண் விலை ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவாகவும், 22 கரட் தங்கம் ஒரு பவுண் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

டொலர் விலை மேலும் குறையுமாக இருந்தால் தங்கத்தின் விலையும் மேலும் குறையும் என்று தங்க வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆறு இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்திசெய்யும் கம்பஹா, கரஸ்நாகல, பஸ்னாகொட நீர் திட்ட புதிய இணைப்பு



## நாளை மறுதினம் திறப்பு

கம்பஹா, கரஸ்நாகல, பஸ்னாகொட நீர்த் திட்டத்தின் புதிய நீர் இணைப்புகளை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் கம்பஹா மாவட்டத்தில் உள்ள 440 கிராமசேவை பிரிவுகளிலுள்ள சுமார் ஆறு இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்திசெய்ய முடியுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

இதன்படி, பஸ்னாகொட நீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட்டத்தின்கீழ் அத்தனகல்ல மற்றும் பஸ்யால பகுதிகளுக்கு புதிய நீர் இணைப்புகள் வழங்கப்படவுள்ளன. அதன் இரண்டாம் கட்டத்தின்கீழ், நிட்டம்புவ, மினுவாங்கொடை மற்றும் கம்பஹாவைச் சுற்றியுள்ள பல பகுதிகளை உள்ளடக்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனவே, இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் முடிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (22) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

கம்பஹா, கரஸ்நாகல, பஸ்னாகொட நீர் வழங்கல் திட்டத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடலும் இங்கு இடம்பெற்றது.

புதிய நீர் இணைப்புகளை வழங்குவதில் மக்களுக்கு வசதியாக 12 தவணைகளில் பணத்தை செலுத்தும் வகையில் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது பஸ்னாகொட நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் அதன் செயற்பாடுகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டன.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் 2021இல் பஸ்னாகொட நீர் வழங்கல் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், சமீப காலமாக கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இங்கு கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இதற்கமைய, பஸ்னாகொட நீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. அத்தனகல்ல, மீரிகம, மினுவாங்கொடை, மஹர மற்றும் தொம்பே உள்ளிட்ட பல பிரதேசங்களை உள்ளடக்கிய இந்த நீர் வழங்கல் அமைப்பின் கீழ் கம்பஹா, அத்தனகல்ல - மினுவாங்கொட கூட்டு நீர் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# மாணிக்கக்கல் தோண்டச்சென்ற ஒருவர் கல் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் உயிரிழப்பு

(ஆ.ரமேஸ்)

கந்தப்பளை, ஹய்பொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகுடுகலை அப்பில் பாம் பிரதேசத்தில் இலக்கம் மூன்று இயற்கை வன பகுதியில் மாணிக்கக்கல் தோண்டிய ஐவரில் ஒருவர் மீது பாரிய கல் ஒன்று சரிந்து விழுந்து பலத்த காயங்களுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக ஹய்பொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகுடுகலை அப்பில் பாம் பகுதியில் சிரச வன பகுதி என அழைக்கப்படும் இலக்கம் 03 இயற்கை வனத்தில் பொகவந்தலாவை பிரதேசத்திலிருந்து ஐவர் அங்கு மாணிக்கக்கல் அகழ்வில் நேற்று முன்தினம் (21) இரவு ஈடுபட்டுள்ளனர். இதன்போது பாரிய குழி ஒன்றை தோண்டி, ஐவரில் இருவர் மாணிக்கக்கல் அகழும்போது மண்மேடுடன் பாரிய கல் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

இதில் பொகவந்தலாவை குயினா தோட்டத்தைச் சேர்ந்த அம்மாசி விஜயகுமார் (வயது 40) என்பவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இவரை சுமந்துகொண்டு ஏனைய நான்கு பேரும் வனப்பகுதியிலிருந்து நேற்று (22) அதிகாலை ஹைபொரஸ்ட் பிரதான வீதிக்கு வருகைதந்துள்ளனர்.

அதேநேரத்தில் காட்டுக்குள் சிலர் மாணிக்கக்கல் அகழ்வதாக மாகுடுகலை வன காரியாலயத்திற்கு தகவல் கிடைத்துள்ளது. உடனே சம்பவ இடத்திற்கு வன பாதுகாப்பு அதிகாரிகள் சென்றுள்ளனர்.

இதன்போது அங்கு காயங்களுக்குள்ளான ஒருவரை சுமந்துகொண்டு நால்வர் வருவதை அவதானித்த அதிகாரிகள் இவர்களை கைதுசெய்து, ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்று சம்பவத்தை தெரிவித்து, பின் காயங்களுக்கு உள்ளானவரை ஹைபொரஸ்ட் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அனுமதித்தபோது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்த நபரின் சடலத்தை சட்ட வைத்தியர் ஒருவரின் ஊடாக பிரேத பரிசோதனை செய்ய சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஹைபொரஸ்ட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கிளிநொச்சியில் நேற்று (22) பிற்பகல் பெய்த கனமழை காரணமாக கிளிநொச்சி நகரிலிருந்து இரத்தினபுரம் வீதி ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (வட்டுக்கோட்டை நிருபர்)

# மஹிந்த – பெசிலின் வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல்செய்யப்பட்ட மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை தொடர்ந்து நீடிப்பதில்லையென உயர் நீதிமன்றம் நேற்று (22) தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்று (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பெசில் ராஜபக்ஷ ஆகியோர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பன, இது தொடர்பான வாதங்களை முன்வைத்தார். மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு இதனை அறிவிக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தைக் கோரினார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், பிரதிவாதிகள் இருவருக்கும் விதிக்கப்பட்ட பயணத்தடை இனி இல்லை என்பதை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறு உயர் நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டது.

# புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை மே 05, 06 மற்றும் 07ஆம் திகதிகளில்

## கொண்டாட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு

'புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை' மே 05, 06 மற்றும் 07ஆம் திகதிகளில் கங்காராம விகாரை, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலக வளாகங்களில் இடம்பெறும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக இவ்வருட வெசாக் பண்டிகையை தேசிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் வெகுவிமரிசையாகக் கொண்டாட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

"புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை" தொடர்பில் நேற்று முன்தினம் (21) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற பூர்வாங்க கலந்துரையாடலின்போதே ஜனாதிபதியின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை" 2023 மே மாதம் 05, 06 மற்றும் 07 ஆகிய திகதிகளில் கொழும்பிலுள்ள கங்காராம விகாரை, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய வெசாக் வலயமாக பெயரிடப்பட்டு பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வண. கிரிந்தே அஸ்ஸஜி தேரர் தெரிவித்தார்.

மே மாதம் 05ஆம் திகதி இடம்பெறும் வெசாக் பௌர்ணமி தினத்தன்று, கங்காராம விகாரையில் சில் பெறும் சம்பிரதாயத்துடன் ஆரம்பித்து, வெசாக் வலயக் கொடிகள், பதாகைகள், வெசாக் கூண்டுகள் மற்றும் மின்விளக்கு அலங்காரங்கள், மலர் பெரஹரா நடத்துதல் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பௌத்த கீதம் இசைத்தல், ஜனாதிபதி அலுவலகம் மற்றும் கங்காராம விகாரையின் பிரதான மேடைக்கு அருகாமையில் நடைபெற இருப்பதோடு, கங்காராம விகாரைக்கு அருகாமையிலும், ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகாமையிலும் வெசாக் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

"புத்த ரஷ்மி வெசாக் வலயத்தை" வெற்றியடையச் செய்வதற்கு அரச துறை மற்றும் தனியார் துறையினர் அனைவரினதும் ஆதரவைப் பெற எதிர்பார்த்துள்ளதாகவும், அதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார்.

அரச அதிகாரிகள், பாதுகாப்புப் பிரிவுத் தலைவர்கள் மற்றும் அனுசரணை எதிர்பார்த்துள்ள தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 09ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** – பயணங்களால் செலவுகள் அதிகரிக்கலாம். உணவு உறக்கம் இன்மையால் அவதி.

**ரிஷபம்** – மூத்த சகோதர வகையில் அனுகூலங்கள் உண்டு. வியாபார தொழில் லாபம் உண்டு.

**மிதுனம்** – தொழில் வகையில் சாதனைகள் செய்வீர்கள், வீண் மனக்கலக்கம் வேண்டாம்.

**கடகம்** – வெளிநாட்டு முயற்சிகள் கணிதம் ஆகும், தந்தை வழி உறவு நன்மை உண்டு.

**சிம்மம்** – எதை நினைத்தும் கலங்காதீர்கள், வழிபாட்டில் மனதை செலுத்துவீர்கள்.

**கன்னி** – தூர பயணங்கள் வேண்டாம், வாத விவாதங்களை தவிர்த்திடுங்கள்.

**துலாம்** – உறவுகளால் எதிர்பார்த்த லாபம் அமையும், வியாபாரம் சிறக்கும்.

**விருச்சகம்** – எதிரிகளை வெற்றிகொள்வீர்கள், நோயிலிருந்து விடுதலை.

**தனுசு** – உங்கள் குழந்தைகளால் மன மகிழ்ச்சி உண்டு, திடீர் அதிர்ஷ்டத்தால் மகிழ்ச்சி.

**மகரம்** – மன மகிழ்ச்சியும் லாபமும் உண்டு, தாய் வழி உறவுகள் உங்களுக்கு உதவுவார்கள்.

**கும்பம்** – இளைய சகோதரர் மூலம் லாபம் உண்டு, மன தைரியத்துடன் எதையும் சாதிப்பீர்கள்.

**மீனம்** – தெளிந்த மனதுடன் சேவையாற்றுங்கள் வெற்றி நிச்சயமாக உண்டு.

**திதி** : துவிதியை பி.ப.6.21 வரை பின் திரிதியை

**நட்சத்திரம்** : ரேவதி பி.ப.2.08 வரை பின் அசுவினி

**யோகம்** : சித்தாமிர்தம் யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப.11.14 - 12.14 மணி வரை

**ராகு காலம்** : 1.44 - 3.14 மணி வரை

**எமகண்டம்** : 6.14 - 7.44 மணி வரை

**குளிகை** : 9.14 - 10.44 மணி வரை

**சந்திராஷ்டமம்** : சிங்க,கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிஷ்டம்** : பூசம்,அனுஷம், உத்தரட்டாதி(பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : சந்திர தரிசனம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மார்ச் 23ஆம் திகதி, வியாழக்கிழமை**

# கொரோனா முன்பாதுகாப்பு காலத்தின் கட்டாயத் தேவை

சீனாவின் வூஹான் நகரில் 2019இன் இறுதியில் உருவான கொரோனா தொற்று, உலகம் முழுவது பரவிய பின்னர், இதுவரை 68 இலட்சம் பேர் பலியாகியுள்ளனர். வூஹான் நகரின் சந்தை ஒன்றில் சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரிகளைப் பற்றிய புதிய ஆய்வு முடிவு ஒன்று சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாதிரிகளில், கொரோனா வைரஸின் மரபணுக்களுடன், ரேக்கான் நாய் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளின் மரபணுக்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சில மாதிரிகளில், மனித மரபணுக்களை விட விலங்குகளின் மரபணுக்களின் அளவு மிக அதிகமாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. விலங்குகளில் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டதற்கு இது ஆதாரமாக உள்ளதாக இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

சீனாவின் வூஹான் நகரில் 2019ஆம் ஆண்டு இறுதியில் உருவான கொவிட்-19 வைரஸ், உலகம் முழுவதும் பரவி மனிதகுலம் அதுவரை காணாத மாபெரும் அழிவைத் தந்தது. பாதிப்புகள், உயிரிழப்புகள் மட்டுமின்றி, உலக நாடுகளின் பொருளாதாரமும் பெரும் சரிவைச் சந்தித்தது. இந்த வைரஸ் அங்கிருந்து பல நாடுகளுக்கும் பரவத் தொடங்கியது. 2020இல் உலகில் சுமார் 150க்கும் அதிகமான நாடுகளை சேர்ந்த மக்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டனர். ஒருவழியாக கொவிட்-19 தீநுண்மியின் பிடியிலிருந்து உலகம் மீளத் தொடங்கியுள்ள வேளையில், மீண்டும் சீனாவில் கொவிட்-19 தீநுண்மி பாதிப்பு அதிகரிக்க ஆரம்பித்துள்ளமை கவலையளிப்பதாக இருக்கிறது.

கொவிட்-19 தீநுண்மியை அறவே ஒழிப்பதாகக் கூறி, கடந்த மூன்றாண்டுகளாக கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வந்தது சீனா. அந்தக் கட்டுப்பாடுகளுக்கு எதிராக கடந்த ஆண்டு இறுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர். ஆட்சிக்கு எதிராகவும், அதிபர் ஷி ஜின்பிங்குக்கு எதிராகவும் பொதுமக்கள் பகிரங்கமாக எழுப்பிய முழக்கம் ஆட்சியாளர்களை அதிர்ச்சியடைய வைத்தது.

இதையடுத்து, கொவிட்-19 கட்டுப்பாடுகளைப் பெருமளவில் தளர்த்தியது சீனா. வெளிநாடுகளிலிருந்து சீனா வருவோருக்கும் கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. இச்சூழ்நிலையில்தான் மீண்டும் கொவிட்-19 பாதிப்புகள் சீனாவில் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளன.

சீனாவில் இதுவரை ஒரு கோடிக்கும் அதிகமானோர் கொவிட்-19 தீநுண்மியால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 32,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் எனவும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது. கடந்த ஆண்டு மட்டும் சீனாவில் கொவிட்-19 தொடர்பாக 10 இலட்சம் மரணங்கள் ஏற்பட்டிருக்கலாம் என சர்வதேச சுகாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். சிறிய நாடுகளில் கூட பாதிப்புகள் பல இலட்சங்களில் இருக்கும்போது, தனது நாட்டில் மொத்தமே 4.71 இலட்சம் பேர்தான் பாதிக்கப்பட்டுள்ளனர் என சீனா கூறுவதை நம்ப முடியவில்லை.

ஒமிக்ரோனின் பி.ஏ.5 பிரிவிலிருந்து உருமாற்றமடைந்த பி.எஃப்.7 தீநுண்மி, சீனாவில்தான் அண்மையில் முதலில் கண்டறியப்பட்டது. அது அமெரிக்கா, தென்கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் பரவியுள்ளது. அதன் தீவிரத்தன்மை குறித்த ஆய்வுகள் நடைபெற்று வரும் நிலையில், அது குறித்த தகவல்களை சீனா பகிர்ந்து கொள்வதில்லை என்பது உலக சுகாதார அமைப்பின் ஆதங்கமாக இருக்கிறது.

நிமோனியாவால் ஏற்படும் மரணங்கள், வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சுவாசக் கோளாறு காரணமாக ஏற்படும் மரணங்கள் மட்டுமே கொவிட்-19 மரணங்களாக சீனாவில் வகைப்படுத்தப்படுகின்றன. ஆனால், இரத்தம் உறைதல், சிறுநீரக பாதிப்பு, மாரடைப்பு போன்ற கொவிட்-19 பாதிப்பால் ஏற்படும் பல சிக்கல்களை சீனா கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.

அண்மையில் சீன அதிகாரிகளுடன் உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் ஆலோசனை மேற்கொண்டனர். அதில், சீனாவில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் தினசரி கொவிட்-19 பாதிப்பு, எத்தனை பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டமை, தினசரி இறப்பு விகிதம் போன்றவை குறித்த தகவல்களை முறையாக அளிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஆனால், இது குறித்த தகவல்களை வெளிப்படையாகவும் விரைவாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் பகிர்ந்துகொள்ள சீனா உடன்பட்டது. ஆனால், பகிர்ந்து கொள்ளவில்லை.

சீனாவில் கொவிட்-19 பாதிப்பு வேகமெடுக்கும் சூழலைத் தொடர்ந்து, அந்த நாடுகளிலிருந்து வருவோருக்கு பயணக் கட்டுப்பாடுகளை அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல், ஜேர்மனி, ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ளன. கொவிட்-19 தீநுண்மியைப் பொறுத்தவரை வெளிப்படையான தகவல் பரிமாற்றமே இந்த நோய்த்தொற்று பரவுவதிலிருந்து காக்கும் பேராயுதம். ஆனால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கொவிட்-19 தொடர்பாக சொன்னதையே இப்போதும் சொல்லி வருகிறது சீனா.

கொவிட்-19 நோய்த்தொற்றின் தீவிர பாதிப்புகளை இப்போது உலக நாடுகள் நன்றாக எதிர்கொள்ளத் தொடங்கிவிட்டன. தடுப்பூசி முதல் தேவையான கட்டுப்பாடுகள் வரை நடைமுறைப்படுத்தப்பட்டு, புதிய அலை வந்தாலும் அதை சமாளிக்கும் நம்பிக்கை உலக நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையான தகவல்களை இரும்புத் திரைக்குள் மறைத்து, மக்களின் உயிருடன் விளையாடிக் கொண்டிருக்கிறது சீனா.

விலங்குகளில் கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டதற்கு ஆதாரம் உள்ளதாக ஆய்வறிக்கைகள் கூறுமானால் அது தொடர்பாக உலகம் தீவிரமாக ஆராய்ந்து இனியும் இப்படியொரு கொடிய நோய்த்தாக்கம் ஏற்படாதவகையில் தடுப்பு மருந்துகளை கண்டறியவேண்டும். பொருளாதாரமும் மனித உயிர்களும் சேர்ந்தே அழிவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது காலத்தின் கட்டாயம்.

# பூர்வீக ஆதிவாசிகளைத் தவிர ஏனையோர் எல்லோரும் இந்நாட்டின் வந்தேறு குடிகள்தான்!



## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

"முஸ்லிம் சமூகம் பற்றிய சரியான விழிப்புணர்வை மாற்று சமூகங்களுக்கும் எத்திவைக்கவேண்டிய பணியை எங்கள் எல்லோருக்கும் இருக்கும் ஒரு மிகப் பெரிய பொறுப்புணர்ச்சியாக கொள்ளவேண்டிய ஒரு கால கட்டத்தில் இருக்கிறோம்."

இவ்வாறு, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கலாநிதி ரவூப் ஸெய்ன் எழுதிய 'இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு' நூல் வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கடந்த வருடம் நடந்த மக்கள் புரட்சி, நாட்டின் அரசியலை தலைகீழாக புரட்டிப் போட்டிருக்கிறது.

அந்த மக்கள் புரட்சிக்கு வித்திட்ட பொருளாதார வீழ்ச்சி, இன்னும் எங்களை இயல்பு வாழ்க்கைக்கு வருவதற்கு இயலாத ஒரு நிலைமையைத் தோற்றுவித்திருக்கிறது.

ஒவ்வொருவரும் அன்றாடம் தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பற்றி சிந்திக்கவேண்டிய ஒரு கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். இன்னும் கூடுதலான வரிச்சுமையை, ஒவ்வொரு துறையிலும் கட்டண உயர்வுகளை, விலைவாசி உயர்வுகளை சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். இவை

எல்லாவற்றிற்கும் மத்தியில் கடந்த வருடம் நடந்த அந்த சமூகப் புரட்சியினால் நாங்கள் எல்லோரும் அனுபவித்த மிகப் பெரிய அச்ச உணர்வு எங்களைவிட்டு அகன்றிருக்கிறது என்றொரு நிம்மதிப் பெருமூச்சையும் நாங்கள் விட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஒருவிதமான முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புக் கலாசாரம் ஒன்றை உருவாக்கி அதன் மூலமாக, அதற்கென்று ஓர் அரசியல் நியாயத்தை கற்பிக்கிற ஓர் ஆபத்தான மனநிலையை இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் விதைக்கிற ஒரு மோசமான கலாசாரம் உருவாகிக் கொண்டுவந்தது. அந்த கலாசாரம் வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காகத்தான் உருவாக்கப்பட்டது என்பதை இன்று பெரும்பான்மை சமூகங்களும் உணர்ந்து கொள்கின்ற அளவிற்கு நாட்டில் நடந்த இந்த சமூகப் புரட்சி, அதனோடு சேர்ந்து நடந்திருக்கிற பொருளாதார வீழ்ச்சி என்பன அமைந்திருக்கின்றன. இந்த காரணங்களையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் ஓர் அளவுக்கு நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்நூலின் மூலம் நூலாசிரியர் எப்படியெல்லாம் வெவ்வேறு துறைகளில் முஸ்லிம்களுடைய பங்களிப்பு ஆரம்பகாலம் தொட்டு இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு துணையாக அமைந்திருந்தது என்பதை பல முக்கியமான அத்தியாயங்களில் வகைப்படுத்தி எங்களுக்கு தந்திருக்கிறார் என்பது முக்கியமான விடயமாகும்.

பொருளாதாரத்துறை, தேசிய இறைமை, பாதுகாப்புத்துறை, அரசியல் பங்கேற்பு, முஸ்லிம்களின் மருத்துவத்துறை பங்களிப்பு, சமய, கலாசார துறையில் எங்களுடைய பங்களிப்பு என்று பல துறைகளில் இவற்றை வேறுபடுத்தி ஆய்வு செய்கிற இந்த முயற்சியின் மூலம் உண்மையில் வெறும் வந்தேறு குடிகளாக மாத்திரம் பார்க்கப்பட்ட ஒரு சமூகம், வந்தேறு குடிகள் மாத்திரமல்ல, வந்தேறு குடிகளாக வந்து, இருக்கிற பூர்வீக குடிகளின் ஒட்டுண்ணிகளாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற மாதிரி முஸ்லிம்களை சித்தரிக்க முயன்ற பலருக்கு இந்த நூலின் மூலம் நல்ல விடைகளை ஆசிரியர் தருகிறார் என்பதுதான் இதில் முக்கியமான விடயமாகும்.

எமது நாடு 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் கைப்பற்றப்பட்டு முதலில் கரையோரப் பகுதிகளும் பிறகு மலையகமும் முழு நாடும் உள்ளாக நாங்கள் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த போதிலும் கூட, இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான ஆதிவாசிகளைத் தவிர மற்றைய எல்லோரும் வந்தேறு குடிகள்தான் என்றளவிற்கு ஏதோ ஒரு வகையில் ஆக்கிரமிப்புகள், படையெடுப்புகள் மூலம் வந்தவர்கள்தான் இங்கிருக்கிற சனப் பரம்பலை உருவாக்கினார்கள் என்பது வரலாறு.

அண்மையில் நான் தெஹியத்தகண்டிய பிரதேசத்திற்குப் போயிருந்தேன். அங்கிருக்கிற ஹெணாணிகல பிரதேசத்தின் ஆதிவாசி தலைவர்களோடு நீண்ட நேரம் உரையாடுகின்ற ஒரு வாய்ப்புக் கிடைத்தது, அவர்களுடைய மொழியில் பேசினார்கள். அதை அந்த ஆதிவாசி சமூகத்திலிருந்த இன்னுமொரு இளைஞர் சிங்களத்தில் மொழிபெயர்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.


நான் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற காரணத்தினால் எப்படியெல்லாம் முஸ்லிம்கள் ஆதிவாசிகளுக்கு உதவியாக இருந்தார்கள் என்பதைக் கூறும்போது, ஆரம்ப காலத்தில் இருந்து தங்களுக்கு எப்படி முஸ்லிம்கள் உதவினார்கள் என்றால், தாங்கள் ஹெணாணிகலயில் இருந்து தங்களுடைய ஆன்மீகப்படி 'கத்தரகம தெய்யோ' என்று அழைக்கப்படுகிற கதிர்காமக் கோயிலுக்கு நடந்து போய் தங்களுடைய காணிக்கைகளை சமர்ப்பித்து வருகிற ஒரு வழக்கம் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும். அப்படி நடந்து போகின்றபோது, வழியில் இருக்கும் ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்திலும் தங்களுக்கு கிடைக்கின்ற உபசரிப்பைப் பற்றி, இது இன்று, நேற்றல்ல தங்களுடைய மூதாதையர் காலத்திலிருந்து இந்த, கத்தரகம யாத்திரையின்போது, தங்களுக்கு பல இடங்களில் முஸ்லிம்கள் உபசரிப்புகள் மாத்திரமல்ல, பணிவிடைகளையும் தங்களுக்கு தங்குமிட வசதிகளையும் செய்துதந்து, தங்களை உபசரிக்கிற மிகப் பெரிய பணியை செய்தார்கள் என்ற விடயங்களைப் பற்றி மிகவும் சிலாகித்து என்னோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆரம்ப காலத்திலிருந்து தங்களுடைய பிரதேசங்களுக்கு வந்த முஸ்லிம் பணிக்கர்களைப் பற்றி அந்த ஆதிவாசித் தலைவர் என்னிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தார். கலாநிதி ஸெய்னுடைய ஊரிலும் கூட இந்த பணிக்கர் வர்க்கத்தினர், காட்டு யானைகளைப் பிடித்து அவற்றை மற்றைய வேலைகளுக்கு பயிற்றுவிக்கும் பணியை செய்த நீண்டதொரு பாரம்பரியம் முஸ்லிம்களுக்கு இருந்திருக்கிறது. அதை அந்த ஆதிவாசித் தலைவரும் என்னிடத்தில் உறுதி செய்தது மாத்திரமல்ல, எப்படியெல்லாம் பூர்வீக காலம் தொட்டு தங்களுடைய இந்த பண்டமாற்று பணிகளில் முஸ்லிம்கள் அவர்களுக்கும் அவர்கள் முஸ்லிம்களுக்கும் உதவியாக இருந்தார்கள் என்பதைக் கூறினார்.

குறிப்பாக இங்கு சொல்லப்படுகின்ற இந்த 'தவளம' என்கிற கரையோரப் பகுதியில் இருந்து மலைநாட்டிற்கு பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான வியாபார நோக்கத்துடனான பயணத்தை முஸ்லிம்கள் மேற்கொண்ட போது, தங்களது பிரதேசங்களை எதிர்கொண்டு போகின்றபோது தங்களுக்கு அவர்கள் இலவசமாக பலவற்றை தந்துவிட்டுப் போனார்கள் என்ற விடயங்களையெல்லாம் ஒரு ஆதிவாசித் தலைவர் என்னிடத்தில் சொல்லுகின்றளவிற்கு முஸ்லிம்களைப் பற்றி, அவர்களுடைய பூர்வீகத்தைப் பற்றி அவர்கள் அதற்கு சாட்சியாக இருந்து பல விடயங்களை பகிர்ந்து கொண்டபோது எப்படியெல்லாம் எங்களுடைய சமூகம் ஆரம்ப காலத்திலிருந்து இந்நாட்டின் பல துறைகளிலும் ஈடுபாட்டுடன் தனது பங்களிப்பைச் செய்திருக்கிறது என்பது மிகத் தெளிவாக தெரிகிறது.

இந்த புத்தகம் முஸ்லிம்களுடைய வணிகத் தொடர்பாடல்கள் மற்றும் இலங்கை வந்த ஆக்கிரமிப்பாளர்களின் சொந்த சுயலாப நோக்கத்திற்கு முரணாக இருந்தபோது எப்படியெல்லாம் பழிவாங்கப்பட்டார்கள் என்ற விடயத்தையும் இங்கு ஆராய்வது மட்டுமல்ல, முஸ்லிம்களுக்கு நடந்த அநியாயங்கள், அக்கிரமங்கள், எப்படியெல்லாம் கடந்த காலங்களில் கரையோரப் பிரதேசங்களுக்கும் மலையகத்திற்குமிடையிலான உறவுப்பாலமா இருந்த முஸ்லிம் வணிகர்களுக்கு கரையோரப் பகுதிகளில் ஆபத்து நேர்ந்தபோது, குறிப்பாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலத்தில் மோசமான பழிவாங்கலுக்குள்ளாக்கப்பட்டு, நிறைய பேர் கூண்டோடு கொலை செய்யப்பட்ட நிலைவரங்கள் ஏற்பட்டபோது கண்டிய மன்னர்கள் முஸ்லிம்களை கிழக்கு பிரதேசங்களில் குடியேற்றினார்கள் என்ற வரலாறும் நாங்கள் எல்லோரும் அறிந்த விடயமாகும்.


இது நிறைய இடங்களில் ஆவணப்படுத்தப்பட்டு, தெளிவாக இந்நாட்டில் முஸ்லிம்களுடைய பூர்வீகம் குறித்த பல தடயங்கள் இருந்தபோதும் அவற்றையெல்லாம் தாண்டி மிகப் பழைமையான தடயங்களை இந்தப் புத்தகம் ஆராய்ந்து ஆவணப்படுத்துகின்ற விடயம் மிகவும் பாராட்டத்தக்கது. இயலுமாக இந்நூலை சிங்கள மொழியில் மொழிபெயர்ப்பது மிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன். சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்படுவதன் மூலம் முஸ்லிம் அல்லாதவர்களும் இந்த நாட்டின் முஸ்லிம்களின் பூர்வீகம் சம்பந்தமாக சரியான ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கு அது வசதியாக அமையும். அதற்கான முயற்சியை ஆசிரியரும் அவருடைய இந்த முயற்சிக்கு துணையாக வந்திருக்கும் சமூக தலைமைகளும் இதில் அவருக்கு பக்கத்துணையாக இருக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.



(தொகுப்பு: எம்.என்.எம்.யஸீர் அறபாத் - ஓட்டமாவடி.)

## தவக்கால சிந்தனை

### "என்னை அனுப்பிய தந்தையும் எனக்குச் சான்று பகர்ந்துள்ளார்"



அக்காலத்தில் இயேசு யூதர்களை நோக்கிக் கூறியது: "என்னைப்பற்றி நானே சான்று பகர்ந்தால், என் சான்று செல்லாது. என்னைப்பற்றிச் சான்று பகர வேறு ஒருவர் இருக்கிறார். என்னைப்பற்றி அவர் கூறும் சான்று செல்லும் ன எனக்குத் தெரியும். யோவானிடம் ஆள் அனுப்பி நீங்கள் கேட்டபோது அவரும் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். மனிதர் தரும் சான்று எனக்குத் தேவை என்பதற்காக அல்ல. நீங்கள் மீட்பு பெறுவதற்காகவே இதைச் சொல்கிறேன். யோவான் எரிந்து சுடர்விடும் விளக்கு. நீங்கள் சிறிது நேரமே அவரது ஒளியில் களிகூர விரும்பினீர்கள். யோவான் பகர்ந்த சான்றைவிட மேலான சான்று எனக்குண்டு. ன்னை செய்து முடிக்குமாறு தந்தை ன்னிடம் ஒப்படைத்துள்ள செயல்களே அச்சான்று. நான் செய்துவரும் அச்செயல்களே தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்கான சான்றாகும். ன்னை அனுப்பிய தந்தையும் எனக்குச் சான்று பகர்ந்துள்ளார். நீங்கள் ஒருபோதும் அவரது குரலைக் கேட்டதில்லை. அவரது உருவைக் கண்டதுமில்லை. அவரது வார்த்தையும் உங்களுக்குள் நிலைத்திருக்கவில்லை. ஏனெனில், அவர் அனுப்பியவரை நீங்கள் நம்பவில்லை. மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் ன எண்ணி அதனைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்கிறீர்களே..! அம்மறைநூலும் எனக்குச் சான்று பகர்கிறது. வாழ்வு பெறுமாறு என்னிடம் வர உங்களுக்கு விருப்பமில்லை. மனிதர் தரும் பெருமை னக்குத் தேவையில்லை. உங்களை எனக்குத் தெரியும். உங்களிடம் இறையன்பு இல்லை. நான் என் தந்தையின் பெயரால் வந்துள்ளேன்" ன்றார்.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1816 – அமெரிக்க மதப் பரப்புனர்கள் கொழும்பு வந்தடைந்தனர்.
- 1919 – இத்தாலியின் மிலன் நகரில் பெனிட்டோ முசோலினி, தனது பாசிச அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1956 – பாகிஸ்தான் உலகின் முதலாவது இஸ்லாமியக் குடியரசாகியது.
- 1965 – நாசாவின் முதலாவது இரு விண்வெளி வீரர்களைக் கொண்ட ஜெமினி-3 விண்கலம் ஏவப்பட்டது.
- 1998 – டைட்டானிக் திரைப்படம் 11 ஆஸ்கார் விருதுகளை வென்றது.
- 2019 – நான்கு ஆண்டுகள் சண்டையின் பின்னர், அமெரிக்க ஆதரவு 'சிரிய ஜனநாயகப் படைகள்' இஸ்லாமிய அரசு மீதான வெற்றியை அறிவித்தன.

# சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த தற்போதேனும் ஆதரவளியுங்கள் !

## எதிர்க்கட்சிகளிடம் ஜனாதிபதி ரணில் கோரிக்கை

*** கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்டதிட்டங்களையும் பின்னணியையும் ஏற்படுத்தி, நாடு கட்டியெழுப்பப்படும்.**

*** இலங்கை, பொருளாதார தொங்கு பாலத்தை கடக்க, தான் செயல்பட்டதை இன்று சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.**

*** தற்போதைய கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் பலன் மக்களுக்கு விரைவில் கிடைக்கும்**

*** சிரமங்களைப் பொறுத்துக்கொண்டு நிதானமாகச் செயல்பட்ட மக்களுக்கு நன்றிகள். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி களிடம் கோரிக்கை விடுத்தார்.**

கடந்த காலத்தை விமர்சிப்பது தனது பணியல்ல என்றும், நாட்டைக் கட்டியெழுப்புவதே தனது பணி எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி, கடந்த கால தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் சட்டதிட்டங்கள் மற்றும் பின்னணியை வகுத்து, எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நேற்று (22) காலை பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றாமல், ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவதே தனது நோக்கம் என்று பலர் குற்றஞ்சாட்டினாலும், இலங்கை கடினமான தொங்கு பாலத்தைக் கடக்க தான் பணியாற்றியதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தான் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற நேசத்துக்குரிய நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் தனக்கு நம்பிக்கை இருப்பதாக மேலும் தெரிவித்த ஜனாதிபதி, கடந்த கால அனுபவங்கள் பலவும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வது தாய்நாட்டை மீண்டும் உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் ஊடாக நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப புதிய பாதை திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பணவீக்கம் காரணமாக முழு சமூகமும் எதிர்கொண்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் தமக்கு சரியான புரிதல் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த சிரமங்கள் தற்காலிகமானவை என்றும், தற்போதைய முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து சிரமங்களையும் அழுத்தங்களையும் தாங்கிய நாட்டுமக்கள் அனைவருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

### ஜனாதிபதி தனது உரையில் மேலும் கூறியதாவது

"சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை எங்களால் பெற முடிந்தது என்பதை இந்த கௌரவ சபைக்கு உத்தியோகபூர்வமாக தெரிவித்துக்கொள்கிறேன். அரச நிதியின் அனைத்து அதிகாரங்களும் அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, இன்று IMF உடன்படிக்கை ஆவணத்தை சமர்ப்பித்து, இந்த பாராளுமன்றத்தில் நாம் பெற்றுள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதி பற்றிய முதல் உத்தியோகபூர்வ அறிக்கையை இந்த சபையில் சமர்ப்பிக்கிறேன்.

பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு நாட்டையே ஜூலை 9ஆம் திகதி நான் பொறுப்பேற்றேன். குழப்பத்தில் இருந்த நாடு. நாளைய தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாதிருந்த நாடு. வங்குரோத்தடைந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவித்த நாடு. பணவீக்கம் 73 சதவீதமாக உயர்ந்திருந்த நாடு. எரிபொருள், எரிவாயு வரிசையில் மக்கள் பல நாட்கள் அவதிப்பட்ட நாடு. பாடசாலைகள் மூடப்பட்ட நாடு. ஒரு நாளைக்கு பத்து - பன்னிரெண்டு மணிநேரம் மின்சாரம் தடைப்பட்டிருந்த நாடு. விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமலிருந்த நாடு. சட்டம், ஒழுங்கு பின்பற்றப்படாத நாடு. அரச அலுவலகங்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு, வெளியாட்கள் அதில் குடியேறியிருந்த நாடு. ஒவ்வொரு இடத்திலும் குண்டர்கள் தாக்குதல் நடத்திய நாடு. எதிர்த்தரப்பினரின் வீடுகளை எரிக்கும் நாடு. நெடுஞ்சாலையில் மக்கள் கொல்லப்பட்ட நாடு.

இவ்வாறான பின்னணியில் பொறுப்பை ஏற்க எவரும் விரும்பவில்லை. சிலர் பின்வாங்கினார்கள். சிலர் ஜாதகம் பார்க்க நேரம் கேட்டார்கள். சிலர் நழுவிச் சென்றனர். சிலர் பயந்தார்கள். அவர்களில் யாரும் பொறுப்பை ஏற்க முன்வராத நிலையில் என்னிடம் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எந்த நிபந்தனையுமின்றி இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டேன். பாராளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனக்கென்று எம்.பிக்கள் யாரும் இருக்கவில்லை. ஆனால், இவை எதுவும் இல்லாவிட்டாலும், எனக்கு ஒரே ஒரு பலம் இருந்தது. நான் பிறந்து, வளர்ந்து, படித்த எனது நேசத்துக்குரிய நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் எனக்கு பல கடந்தகால அனுபவங்கள் இருந்தன.

2001இல், நாட்டின் பொருளாதாரம் மறைப் பெறுமானமாக வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால், ஆட்சிப் பொறுப்பை ஏற்று 2 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு வர என்னால் முடிந்தது. அதுமட்டுமல்லாமல், டோக்கியோ உதவி மாநாட்டின் மூலம் 4 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை என்னால் பெற முடிந்தது.

துரதிர்ஷ்டவசமாக, அதன்பின்னர் ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள் அந்தப் பணத்தை சரியாகப் பயன்படுத்தவில்லை. 2015இல் நான் பொருளாதாரத்தைப் பொறுப்பேற்றபோது அது பலவீனமான நிலையில் இருந்தது. ஆனால், 2018இல், பட்ஜெட்டில் முதன்மையான மேலதிகத்தை எட்ட முடிந்தது. பல்வேறு சலுகைகளை வழங்கியும் சுமார் 106% சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தோம்.

இந்தக் கடுமையான சவாலை ஏற்கும்போது, கடந்த கால அனுபவங்கள் மூலம் பெற்ற நம்பிக்கை மட்டுமே எனக்கு இருந்தது. நான் வீழ்ந்தாலும் நாடு வீழாது என்ற எண்ணத்தில் சவாலை ஏற்றுக்கொண்டேன்.

### சபாநாயகர் அவர்களே,

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையுடன், இளைஞர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப எங்களுக்கு ஒரு பாதை திறக்கப்பட்டுள்ளது. மீண்டும் எமது தாய்நாட்டைக் கட்டியெழுப்பு வதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

இந்த கடன் வசதியின்கீழ், 4 ஆண்டு களில் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியைப் பெறுவோம். அதன்முதல் தவணையின் கீழ் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கிறது. உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் 7 பில்லியன் டொலர் துரித கடன் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

IMF நீடிக்கப்பட்ட கடன் வசதியை நெருப்பு வட்டியுடன் கூடிய மற்றொரு கடன் என்று சிலர் விபரிக்கிறார்கள். இந்தப் பணத்தில் நாட்டின் முழுக் கடனையும் அடைக்க முடியாது என்று கூக்குரலிடுபவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய கருத்துகள் அவர்களின் அறியாமையையே காட்டுகிறது அல்லது அப்பாவி மக்களை பொய் சொல்லி ஏமாற்றி அரசியல் ஆதாயங்களைப் பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

IMF நீடிக்கப்பட்ட கடன் என்பது வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க வழங்கப்படும் வசதியாகும். அதற்கான தளமும் தயார்செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் மீண்டும் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலங்கை இனி வங்குரோத்தடைந்த நாடாக இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது. எமது உள்நாட்டு வங்கிகளுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் கடன் பத்திரங்களை மதிக்கின்றன. ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி பெறுவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கை மீது நம்பிக்கை வைப்பர். பரந்தளவிலான சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகள் எங்களுக்காக திறக்கப்படும். வலுவான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் தயாராகி வருகிறது.

அது மட்டுமன்றி, இந்த உடன்படிக்கையின் மூலம் நமது நாட்டின் நிதி ஒழுங்கு சட்டமாக்கப்படும். ஊழலைத் தடுக்க புதிய கடுமையான சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் இலங்கையில் இதுவரை இல்லாத புதிய நிதிக் கலாசாரம் மற்றும் ஊழலற்ற சூழல் உருவாக்கப்படும்.

### சபாநாயகர் அவர்களே,

எமது நாட்டைப் பற்றி சர்வதேச நாணய நிதியம் முடிவெடுக்கும் முன்னரே நாட்டை முழுமையாக முடக்க சிலர் முயற்சித்தனர். இடைவிடா வேலை நிறுத்தத்தை முன்னெடுத்து, பொருளாதாரத்தை சீரழித்து நாட்டை அராஜகமாக்க திட்டமிட்டனர். நாசவேலை மூலம் IMFஒத்துழைப்பை தடுக்கலாம் என்று நினைத்தனர். சில அரசியல் குழுக்கள், சில தொழிற்சங்கங்கள், சில ஊடகங்கள் இதற்காக கடினமாக உழைத்தன. நாடு ஸ்திர நிலையில் இல்லை என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்றும் கூறினர்.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாததால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்று கூறினர். இப்படியான பொய்களைப் பரப்பி நாட்டுமக்களை வீதிக்கு இறக்க முயற்சித்தனர்.

எனினும், இந்த நாசகார செயற்பாடுகளை பெரும்பான்மையான மக்கள் ஆதரிக்கவில்லை, தனிப்பட்ட அரசியல் அதிகார நோக்கங்களுக்காக நாட்டின் முன்னேற்றத்திற்கு குந்தகம் விளைவிக்க பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை, அவர்கள் நாட்டுக்காக பொறுப்புணர்வோடு செயற்பட்டனர். பல்வேறு சிரமங்களுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியில், அவை அனைத்தையும் சகித்துக்கொண்டு, துன்ப, துயரங்களைத் தாங்கிக்கொண்டு நிதானமாகவும், பொறுமையாகவும் பெரும்பான்மையான மக்கள் செயற்பட்டனர். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு அவர்களின் அர்ப்பணிப்பு பெரும் பலமாக இருந்தது. எனவே, முதலில் இந்நாட்டு மக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விடயத்தில் எங்கள் அதிகாரிகள் இரவு - பகலாக கடுமையாக உழைத்தனர். சிலர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர். அமைச்சர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இச்சபையின் உறுப்பினர்கள் பலர் அதற்கு ஆதரவளித்தனர். சிலர் பகிரங்கமாகவும் பலர் இரகசியமாகவும் ஆதரவளித்தனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும், இந்த நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்கு எங்களின் முக்கிய கடன் வழங்குநர்கள் எங்களுக்கு ஆதரவளித்தனர். வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் எங்களுக்கு ஆதரவளித்தன. வெளிநாட்டு அரச தலைவர்கள், அமைச்சர்கள், சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகள், பிரதிநிதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், அதிகாரிகள் என பலரும் எங்களுக்கு உதவினார்கள். அவர்கள் அனைவருக்கும் இலங்கையின் மரியாதைக்குரிய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

### சபாநாயகர் அவர்களே,

நாம் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குகிறோம், மேலும் பல பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இங்குதான் நமது வெற்றிக்கான அடிப்படை இருக்கிறது. இவற்றில் சில மறுசீரமைப்புகளை, 2022 இடைக்கால வரவு-செலவுத்திட்டம் மற்றும் 2023 வரவு-செலவுத்திட்டங்களில் முன்மொழிந்து ஏற்கனவே செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் இன்னும் பல மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவோம். அவற்றுள், சில முக்கியமான விடயங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும், நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றதும், எதிர்காலத்தில் அமுல்படுத்த எதிர்பார்த்துள்ள மறுசீரமைப்பு செயற்பாடுகள் குறித்தும் இந்த கௌரவ சபைக்கு தெரிவிக்க எதிர்பார்க்கின்றேன்.

### அரச வருமானத்தை அதிகரிக்கும் திட்டம்

★ 2025ஆம் ஆண்டுக்குள் முதன்மை பற்றாக்குறையை மொத்த தேசிய உற்பத்தியில் 2.3% ஆக மாற்றுவதே எமது இலக்காகும்.

★ இலங்கை அரசாங்கத்தின் வருமானம் தற்போது மொத்த தேசிய உற்பத்தியில் 8.3% ஆகும். உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நமது அரசின் வருமானம் மிகக் குறைந்தளவில் உள்ளது. இதனால்தான் 2026ஆம் ஆண்டுக்குள் அரச வருமானத்தை மொத்த தேசிய உற்பத்தியில் 15% ஆக உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

★ துறைவாரி வரிச் சலுகைகள் இல்லாமல் கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி விகிதம் இப்போது 30% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ வற் வரியை 8% சதவீதத்திலிருந்து 15% சதவீதமாக உயர்த்த நாம் நடவடிக்கை எடுத்தோம். வற் வரிக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்குகளை படிப்படியாகக் குறைக்கவும், வற் வரி திரும்ப செலுத்துவதை துரிதப்படுத்தவும், எஸ்-வற் முறையை இரத்துசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ 2025இல், குறைந்தபட்ச வரி விலக்குடன், சொத்து வரி முறைக்குப் பதிலாக செல்வ வரியொன்றை விதிக்கவும், பரிசு மற்றும் பரம்பரை சொத்து வரியொன்றை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### அரச செலவு முகாமைத்துவம்

★ முறையான செலவு முகாமைத்துவம் மூலம் அரச செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ பணவீக்கத்திற்கேற்ப, ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை சமநிலை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், முதன்மை வரவு-செலவுத்திட்டக் கையிருப்பு வரம்பிற்குள் இந்த மாற்றங்கள் செய்யப்படும்.

### அரச நிறுவனங்கள் மற்றும் வலுசக்தி விலை நிர்ணயம்

★ எரிபொருளின் விலை நிர்ணயம் செய்வது அரசியல் அதிகார மட்டத்திலிருந்து முற்றாக நீக்கப்படும். 2018 விலை சூத்திரத்தின்படியே எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது.

★ எதிர்கால செலவு மதிப்பீட்டை கணக்கில் கொண்டு, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மின்சார விலையை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரியளவில் நஷ்டத்தை சந்தித்துவரும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, ஸ்ரீலங்கா விமான சேவை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களின் இருப்பு நிலைகள் மறுசீரமைக்கப்படும். காலாவதியான இறையாண்மை பிணைகளின்பேரில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகையை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய கடன் தொகையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### விலை நிலைத் தன்மை மற்றும் நிதிக் கொள்கை

பணவீக்க விகிதத்தை மீண்டும் 4% மற்றும் 6%க்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை பணவீக்கத்தை கணிசமான அளவில் குறைக்க முடிந்துள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்க மதிப்பிற்குக் குறைப்பது எங்கள் இலக்கு.

★ இந்தத் திட்டங்களை செயல்படுத்தும்போது, பணம் அச்சிடுவது படிப்படியாகக் குறைந்துவிடும். இதனால் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுசெய்ய, கடன் பெற்றுக்கொள்ளாமல் வருமானத்தை ஈட்டிக்கொள்ள திறைசேரிக்கு நேரிடும்.

★ தற்போதுள்ள அந்நியச் செலாவணி, கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு, அந்நியச் செலாவணி சந்தையின் செயல்பாடுகள், சந்தை அளவுகோல்களின் அடிப்படையில் தீர்மானிக்க அனுமதிக்கப்படும்.

★ தீர்மானிக்கப்பட்ட இலக்குகளின்படி, மத்திய வங்கி வெளிநாட்டுக் கையிருப்புகளை அதிகரிக்க வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்படும்.

### நல்லாட்சி

உள்ளூர் நிபுணர்களின் கருத்துகளை உள்வாங்கி, அரசாங்கத்தின் பலவீனங்கள் குறித்த IMF அறிக்கை ஒன்றைத் தயாரிக்கிறது. ஊழலைத் தடுப்பது தொடர்பாக அரசு மற்றும் நிறுவன கட்டமைப்பிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிய இதனால் வாய்ப்பு ஏற்படும்.

★ ஐ.நா. சாசனத்தின் பிரகாரம் ஊழல் எதிர்ப்புச் சட்டம் தயாரிக்கப்படும்.

★ இழந்த சொத்துகளை மீட்பதற்கான ஏற்பாடுகள் 2024ஆம் ஆண்டு மார்ச் மாத்ததிற்குள் சட்டக் கட்டமைப்பில் சேர்க்க எதிர்பார்க்கிறோம்.

★ வலுவான நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உருவாக்கப்படும்.

★ சலுகை வரி அடிப்படையில் வாகனங்களை இறக்குமதிசெய்ய அனுமதிபெற்ற நபர்கள், வரிச்சலுகை, வரித் தீர்வைப் பெறும் நிறுவனங்களின் பட்டியல் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பகிரங்கப்படுத்தப்படும். பாரியளவிலான பொது கொள்முதல் ஒப்பந்தங்களின் விவரங்களும் பகிரங்கப்படுத்தப்படும்.

### வளர்ச்சி

★ சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புடைய திட்டங்களிலுள்ள சீர்திருத்தங்கள் மூலம் நடுத்தர மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் வர்த்தக சீர்திருத்தங்கள் தொடர்பான செயற்பாடுகள், பெண்களின் தொழிலாளர் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், திறன் மேம்பாடு, எரிசக்தித்துறை மறுசீரமைப்பு ஊடாக செயல்திறனின்மையையும் செலவினங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பிலும் இங்கு கவனத்திற்கொள்ளப்படுகின்றன.

### எதிர்கால நடவடிக்கை

★ IMF திட்டத்தைத்திற்கு அப்பால் சென்ற, பல் பொருளாதார சீர்திருத்தங்களை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். பொருளாதாரத்தைத் திறப்பதன் மூலமும், டிஜிட்டல் மயமாக்குவதன் மூலமும் நிலையான மறுமலர்ச்சியை அடைவதும், நடுத்தர மற்றும் நீண்ட கால உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதும் இதன் நோக்கமாகும்.

★ அதேநேரத்தில், இருதரப்பு கடன் வழங்குநர் களுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். நாங்கள் இதுவரை கடைப்பிடித்துவந்த அதே நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களுடன் திறந்த மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.

★ கடனைத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் ஏற்படுத்திக்கொண்ட விதிமுறைகள் குறித்து இறுதி முடிவுகளை எடுப்பதற்கு முன்னர், அனைத்து இருதரப்புக் கடன் வழங்குநர்கள் அதைப் பற்றி தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் திறந்த முறையொன்றை பின்பற்றுகிறோம். ஏனைய வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களின் விடயத்திலும் இதே நடைமுறை பின்பற்றப்படும். அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் நியாயமான முறையில் மறுசீரமைப்பை மேற்கொள்வது எமது எதிர்பார்ப்பாகும்.

★ எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதத்தை அனுப்பியதன் மூலம் நான் தெரிவித்ததுபோல், எந்தவொரு வழங்குநர்களுக்கும் கூடுதல் கரிசனை செலுத்துவதில்லை. அவர்கள் அனைவரையும் சமமாக நடத்துகின்றோம். நாங்கள் இதுவரை அவர்கள் அனைவருடனும் வெளிப்படையாகவும் நட்பாகவும் பணியாற்றுவோம். எதிர்காலத்திலும் அவ்வாறே தொடர்ந்து பணியாற்றுவோம். எங்கள் கடன்நிலை குறித்து தொடர்ந்து அறிக்கைகள் வெளியிடப்படும். நாட்டின் கடன் பற்றி எந்தத் தகவலும் மறைக்கப்பட மாட்டாது.

### சபாநாயகர் அவர்களே,

நாங்கள் கடினமான காலத்தைக் கடந்து வருகிறோம், வரிச்சுமையால் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை நாம் அறிகின்றோம். பணவீக்கத்தால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறிவோம். ஆனால், இந்த நேரத்தில் நாம் தற்போது செயல்படுத்திவரும் கொள்கைகளிலிருந்து விலகிச் செல்ல முடியாது. நாம் எதிர்கொள்ளும் கசப்பான உண்மை இதுவாகும்.

ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எங்கள் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய நாங்களும் சர்வதேச நாணய நிதியமும் நடவடிக்கை எடுப்போம். முதல் பரிசீலனை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும். தற்போதைய வரி முறைமையை திருத்துவது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட முன்மொழிவுகளை திறைசேரி தயாரித்து வருகிறது. மேலும், பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். அவர்கள் அனைவருடனும் கலந்துரையாட நாம் எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னரே பொதுவான உடன்பாட்டை நாம் எட்ட முடியும்.

ஜூன் மாத மதிப்பாய்வின்போது இந்த வரி திருத்தங்களை எங்கள் திட்டத்தில் சேர்க்க IMF உடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். அதுமட்டுமல்லாமல், காலத்திற்கேற்ப ஏனைய கொள்கை ரீதியிலான திருத்தங்கள் குறித்தும் நாம் ஆலோசிப்போம்.

இவை உணர்ச்சிகளாலும் போராட்டங்களாலும் தீர்க்கப்படக்கூடியவை அல்ல. இப்பிரச்சினைகள் விழிப்புணர்வோடு, அக்கறையோடும், புத்திசாலித்தனத்துடன் தீர்க்கப்பட வேண்டும்.

### சபாநாயகர் அவர்களே,

நாம் கடினமான காலங்களைக் கடந்து வருகிறோம். ஆனால், எங்களின் சிரமங்களும், துன்பங்களும் தற்காலிகமானவை. தற்போதைய முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின் பலனை விரைவில் நாம் பெறுவோம். நாளை நாட்டைக் கையேற்கும் இளைஞர்களுக்காக, நமது எதிர்கால சந்ததியினருக்காக இந்த அர்ப்பணிப்பை நாம் செய்யவேண்டும்.

இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு முறையான நிதி ஒழுக்கத்துடன் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்தினால், நாட்டின் எதிர்காலத்துக்கு வலுவான பொருளாதார அடித்தளம் உருவாகும். நாம் இந்தப் பாதையை விட்டு விலகினால், கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்ததைவிட மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படும்.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான பாராளுமன்ற விவாதத்திற்கான திகதியை மார்ச் மூன்றாவது வாரத்தில் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்போது உங்கள் கருத்துகளையும் உங்கள் அனைவரின் ஆதரவு தருமாறு கௌரவ சபையில் கேட்டுக்கொள்கிறோம்.

மற்றுமொரு முக்கியமான விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். IMF உடன்படிக்கையில் மாத்திரம் நாங்கள் திருப்தியடைய முடியாது. இது பயணத்தின் முடிவு அல்ல. இது மற்றொரு நீண்ட பயணத்தின் ஆரம்பமாகும். இப்போது நாம் நமது முயற்சியுடன் அந்த வழியில் செல்ல வேண்டும்.

நாங்கள் நமது கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கடனை மறுசீரமைக்க வேண்டும். அத்துடன், நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் வழிகளை உருவாக்க வேண்டும்.

உலக சந்தையில் மட்டுமன்றி, நமது பிராந்திய சந்தையிலும் நமது பங்கை விஸ்தரிக்க வேண்டும். பாரிய பொருளாதார சீர்திருத்த செயல்முறையை அச்சமின்றி, தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.

இவை அனைத்தும் எளிதான இலக்குகள் அல்ல. ஆனால், நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும். இது கடினமானதொரு பயணம். அந்தக் கடினமான பயணத்தில் நாம் கவனமாக பயணிக்க வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது முதன்மையான குறிக்கோளாக இருக்க வேண்டும். முதலாவதாக, இரண்டாவது, மூன்றாவதாக, நாட்டைக் கட்டியெழுப்புவது மட்டுமே எங்களின் இலக்கு. அப்படிச் சிந்தித்தால் இந்தப் பாதையில் வேகமாகவும் வெற்றிகரமாகவும் பயணிக்கலாம்.

### சபாநாயகர் அவர்களே,

IMF உடன் நாங்கள் செய்த திட்டத்தை நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தி முடிக்க வேண்டும். ஆனால், நமது பலம் மற்றும் உறுதியைப் பொறுத்து மூன்றிலிருந்து மூன்றரை வருடங்களில் அதனை செய்து முடிக்கலாம். நாம் அதற்கு முயற்சிக்கலாம். இதற்காக கடினமாக உழைப்போம்.

இங்கே நாம் குறிப்பிட்ட சில விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். முதலாவதாக, சமூகத்தின் கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு வலுவான சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, ரூபாயை வலுப்படுத்து வதற்கான உத்திகள் மற்றும் முறையான திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியால் இலங்கையில் தமிழ்பேசும் மீனவர்களே பாதிப்பு

## தமிழக மக்கள் புரிந்துகொள்ளவில்லையென அமைச்சர் டக்ளஸ் ஆதங்கம்

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறையினால் இலங்கையின் வட பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்பேசும் மக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை தமிழக மக்கள் புரிந்துகொள்ளாமல் இருப்பது வருத்தமளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேகப் உடனான சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற குறித்த சந்திப்பு தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,



இலங்கையின் கடல் வளத்தினையும், வட பகுதி தமிழ்பேசும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினையும் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியாவில் வெளிப்படுத்தப்படும் தவறான கருத்துகள் இரு நாடுகளுக்கும் இராஜதந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியவை.

இந்நிலையில், இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழிலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முன்னெடுக்கப்படும் இராஜதந்திர அணுகுமுறைகளின் தொடர்ச்சியாக பிரதி உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு இடம்பெற்றதாகவும், இதன்போது இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்தில் இரு நாடுகளும் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஹட்டன் – அவிசாவளை வீதியில் வேன் – முச்சக்கரவண்டி மோதி விபத்து

## ஐந்து வயதுச் சிறுமி உயிரிழப்பு

ஹட்டன் – அவிசாவளை வீதியில் இங்கிரிவத்தை பகுதியில் முச்சக்கரவண்டியும் வேனும் மோதிய விபத்தில் 5 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளதாக கிதுல்கல பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கிரிவத்தை, தளிகம பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி உயிரிழந்த சிறுமி தனது தாய் மற்றும் தந்தையுடன் தளிகம பகுதியை நோக்கி பயணித்தபோது எதிர்த் திசையில் வந்த வேன் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

பெற்றோர் மற்றும் சிறுமி ஆகியோர் காயமடைந்து கரவனெல்ல வைத்தியசாலையில்



சேர்க்கப்பட்ட பின்னர் இரவு 7 மணியளவில் சிறுமி உயிரிழந்துள்ளார்.

வேனில் பயணித்த ஒருவரும் காயமடைந்துள்ளதுடன், அவர் தற்போது கரவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

உயிரிழந்த சிறுமியின் தாய் கர்ப்பிணிப் பெண் என்பதுடன், வயிற்றில் இருந்த குழந்தையும் விபத்தில் உயிரிழந்துள்ளது. அவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேன் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கித்துல்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நபரொருவரின் கைகளைத் துண்டித்து அவற்றுடன் தப்பிச்சென்றவரைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

மொரட்டுவ, கொரலவெல்ல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் மின்னியலாளர் ஒருவரின் கைகளை வெட்டிவிட்டு, அந்தக் கைகளுடன் தப்பிச்சென்ற சந்தேகநபரை கைதுசெய்ய விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் அருகிலுள்ள பாதுகாப்பு கெமராவில் பதிவாகியுள்ளது.

40 வயதுடைய குறித்த நபர் நேற்று முன் தினம் (21) இரவு தனது வீட்டின் முன் நின்று கொண்டிருந்தபோது, சந்தேகநபர் கூரிய ஆயுதத் தால் அவரது கைகளைத் துண்டித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன்,



சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தனிப்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பாகிஸ்தானின் தேசிய தின நிகழ்வு






(அஷ்ரப் ஏ சமத்)



கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரகம், பாகிஸ்தான் தேசிய தினத்தின் வரவேற்பு நிகழ்வை ரமழானை முன்னிட்டு (நேற்று) 22 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) கொண்டாடியது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கலந்துகொண்டதுடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முப்படைகளின் தளபதிகள் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய நாடுகளின் இராஜதந்திர அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள், அரசாங்கப் பிரதிநிதிகள், பிரபல வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பாகிஸ்தானிய ஆதரவாளர்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) உமர் பரூக் பர்கி கருத்து தெரிவிக்கையில், பாகிஸ்தான், காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க காலத்திலிருந்து 75 வருடங்கள் நட்புறவுடன் இருந்துவருகின்றது.

இலங்கையில் பாதுகாப்பு உயர்கல்வித் துறைகளுக்கும் இலங்கை மக்களுக்கு உலர் உணவு, மருந்துகள் போன்றவற்றை அவ்வப்போது உதவி வருகின்றது. அத்துடன், பௌத்தமத குருக்கள் அண்மையில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வதற்கும் அங்குள்ள பௌத்த சின்னங்களை தரிசிப்பதற்கும் பாகிஸ்தான் வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

இலங்கையிலுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் பெருமளவில் பாகிஸ்தான் சென்று பாதுகாப்புத்துறையில் பயிற்சிகளைப் பயிலுவதற்கும் பாகிஸ்தான் வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

பாகிஸ்தானும் இலங்கையும் பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் நெருங்கிய உறவுகளை தொடர்ந்து பேணி வருகின்றன. வர்த்தகம், பாதுகாப்பு, விஞ்ஞானம், கலாசாரம் மற்றும் கல்வி போன்ற பல துறைகளில் பாகிஸ்தான் - இலங்கை உறவு அடங்கியுள்ளது என்று குறிப்பிட்ட அவர், இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பாகிஸ்தான் அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாக வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் உயர்ஸ்தானிகர் நன்றி தெரிவித்ததோடு, இரு நாடுகளும் தமது 75 வருட நட்புறவைக் கொண்டாடும் நிலையில், இந்த வருடம் பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் விசேடமானது எனவும் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

# வட்டக்கச்சி விநாயகர் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம்






கிளிநொச்சி வட்டக்கச்சி விநாயகர் வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரி நேற்று (22) கவனயீர்ப்புப் போராட்டமொன்றை பிரதேச மக்கள் முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக கூடிய வட்டக்கச்சி பிரதேச மக்கள், கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் உள்ளிட்ட அதிகாரிகள் குறித்த மக்களுடன் கலந்துரையாடினர். இதன்போது, குறித்த வீதியை அபிவிருத்தி செய்வதற்கு ஒருசிலர் இடையூறு விளைவிப்பதாகவும், அதனால் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள், மாணவர்கள் எனப் பலரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன்போது குறித்த விடயம் தொடர்பில் அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் கேட்டறிந்த மேலதிக அரசாங்க அதிபர், அதற்கான நடவடிக்கையை எடுப்பதாகவும், மாவட்ட அரசாங்க அதிபர் இல்லாமையால் அவரை சந்திக்க முடியாது எனவும் குறிப்பிட்டதுடன், அரசாங்க அதிபர் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை முன்னெடுப்பார் எனவும் தெரிவித்தார்.

இதன்போது பிரதேச மக்களும், முன்னைநாள் பிரதேச சபை உறுப்பினர்களான மு.சிவமோகன், ஜீவராஜ் ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

## 22.03.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 1 6 5361 | 111 835 |
| கனேடியன் டொலர் | 115 6643 | 131 2211 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 33 6052 | 37 4833 |
| யூரோ | 225 721 | 245 2810 |
| ஜப்பான் யென் | 1 244 | 1 3881 |
| சிங்கப்பூர் டொலர் | 121 8401 | 137 230 |
| ஸ்ரேலிங் பவுன் | 270 2873 | 3 3 3225 |
| சுவிஸ் பிரான்ங் | 225 4251 | 25 7232 |
| ஐ.அ.டொலர் | 201 5042 | 22 0514 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 742 5403 |
| குவைட் | குவைட் தினார் | 0, 38 83 |
| ஓமான் | ஓமான் றியால் | 724 85 0 |
| கட்டார் | கட்டார் றியால் | 76 7651 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 74 5642 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 76 526 |

5ஆம் பக்கத் தொடர்ச்சி...

மூன்றாவதாக, ஊழலுக்கு எதிரான சட்டங்களை உடனடியாக இயற்றி செயல்படுத்த வேண்டும். நீதியமைச்சர் இதற்கான சட்டமூலத்தை விரைவில் சமர்ப்பிப்பார்.

நான்காவதாக, சமூகத்தில் ஏற்படுத்த வேண்டிய ஏனைய கட்டமைப்பு சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவற்றைக் கண்டறிந்து சீர்திருத்தங்களை ஆரம்பிக்க வேண்டும்.

**சபாநாயகர் அவர்களே,**

டி.எஸ்.சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் எமது நாடு வெளிநாட்டுக் கடன்கள் எதுவும் பெறவில்லை. பிற்காலத்தில் நம் நாட்டின் வருமானத்தில் செலவுகளை செய்யாமல், வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கி நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒரு பாரம்பரியம் உருவானது.

அந்தப் பாரம்பரியம், புற்றுநோயாக மாறியதால் இன்று நாம் அனைவரும் அவதிப்பட்டு வருகிறோம். நாம் எல்லா நேரத்திலும் கடன் வாங்க முடியாது. கடன் பெறாத தேசமாக மாற நாம் பாடுபடவேண்டும். அதற்காகவே, இந்த இக்கட்டான காலத்திலிருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இதுவரை நாம் எடுத்துள்ள அனைத்து கடன்களையும் செலுத்தி முடிக்க வேண்டும். இந்தப் பாதையில் நாம் சரியாகத் தொடர்ந்தால், அந்த நிலையை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அந்தக் கடனைச் செலுத்திய பின்னர், நாட்டின் செலவினங்களைச் சமாளிக்கும் வருமானத்தை உருவாக்கும் வலிமையைப் பெற வேண்டும். முயன்றால் அதனை நம்மால் செய்ய முடியும். அந்த வழியை நாம் பின்பற்றினால், சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2048இல் நம் நாட்டை உலகில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற முடியும்.

இங்கு இன்னுமொரு விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேரவாத பௌத்த நாடுகள் எப்போதும் பொருளாதாரத்தில் ஏழ்மை நிலையில் உள்ளதாக சமீபத்தில் ஒரு கருத்து வெளியிடப்பட்டது.

இப்போது தாய்லாந்து இந்தக் கருத்தை உடைக்கப் போராடுகிறது. உலகின் தேரவாத மையமாகக் கருதப்படும் நாமும் அந்தக் கருத்தை தகர்த்தெறிய பாடுபட வேண்டும். ஒரு தாயின் பிள்ளைகளாகிய நாம் ஒருமனதாக முயற்சிசெய்தால் அந்தக் கருத்தை உடைக்க முடியும். உலகின் பொருளாதார மையமாக இலங்கையை மீண்டும் பிரபலமாக்க முடியும்.

**சபாநாயகர் அவர்களே,**

நான் முதலில் பிரதமராக பதவியேற்றபோது, நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கோரினேன். ஆனால், எனக்கு அந்த ஆதரவு கிடைக்கவில்லை. அதன் பின்னர் நான் ஜனாதிபதியாக பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதும், எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கோரினேன். ஆனால், கிடைக்கவில்லை. வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் கேட்டேன். எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

தற்போதைய பாராளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கேட்டேன். ஆனால், எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

அந்த சந்தர்ப்பங்களில், அவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி ஆதரவளிக்க மறுத்துவிட்டனர். எனது நியமனம் அரசியலமைப்புக்கு எதிரானது என்றார்கள். தேசிய பட்டியலிலிருந்து பிரதமரை நியமிக்க முடியாது எனக் கூறினார்கள். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதல்ல, ராஜபக்ஷக்களைக் காப்பாற்றுவதே எனது நோக்கம் என்றார்கள். கடினமான தடையை கடக்கப் போவது இலங்கை அன்னை அல்ல, நாமல் ராஜபக்ஷதான் என்றார்கள்.

ஆனால், இலங்கை அன்னையை பொருளாதார தொங்கு பாலத்தைக் கடக்கச் செய்ய நான் பாடுபட்டுள்ளதை சர்வதேச சமூகம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

எதிர்த்தரப்பின் குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் சொல்லப்போவதில்லை. கடந்த காலத்தை விமர்சிப்பது என் வேலையல்ல. எதிர்காலத்தை உருவாக்குவதே எனது பணி. கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்டங்களையும் விதிகளையும் மற்றும் பின்னணியையும் ஏற்படுத்தி, எதிர்காலத்தை உருவாக்கவே முயற்சிக்கின்றேன். இதற்காக அர்ப்பணிப்பேன். செயற்படுவேன்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளில் இணைந்துகொள்ளுமாறு இன்றும் எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடன் நான் வாதிடவில்லை. என்னை விமர்சித்தபோது அதற்குப் பதிலளிக்க முயற்சிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை என்பதால் அப்படிச் செய்யவில்லை. உங்கள் அரசியல் கருத்துகளை ஒதுக்கி வைக்கவும். உங்கள் அதிகாரம் குறித்து சிந்திக்கும் முன், நாட்டைப் பலப்படுத்துவது பற்றி சிந்தியுங்கள். ஏனைய அரசியல் கருத்துகளில் சம்பிரதாயமான முறையில் செயற்படுங்கள். ஆனால், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில், நிலையான அரசியல் கட்டமைப்பிலிருந்து வெளியே வாருங்கள். பொருளாதாரத்தை உயர்த்த இந்த முயற்சிக்கு ஆதரவு தாருங்கள். ஏனைய விடயங்களின்போது நாம் எதிரணியில் நிற்கலாம். ஆனால், இந்தப் பணிகளின்போது, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

மீண்டும் அந்தக் கோரிக்கையை வைக்கிறேன். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஐ.எம்.எவ். உடன்படிக்கையை செயல்படுத்த தற்போதேனும் உங்கள் ஆதரவை வழங்கவும். இந்தப் பணியில் அனைவரும் கைகோர்ப்போம்.

# டொனால்ட் ட்ரம்ப் கைதாக வாய்ப்பு; தயார் நிலையில் அமெரிக்க பொலிஸ்!

## முக்கிய நகரங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு




அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கைதுசெய்யப்பட வாய்ப்புள்ளதால் அசம்பாவிதங்களைத் தவிர்க்க அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் 2017ஆம் ஆண்டுமுதல் 2021ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப், 2016இல் நடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தன்னுடன் நெருக்கமான உறவில் இருந்ததாக பிரபல ஆபாச நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸ் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுவதாக அறிவித்துள்ள நிலையில், பாலியல் தொடர்பை மறைக்க ஆபாச நடிகைக்கு அவர் பணம் கொடுத்த விவகாரம் தற்போது பூதாகரமாக வெடித்துள்ளது.

தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க அமெரிக்கா மொடல் ஸ்டோமி டேனியல்ஸ்க்கு ட்ரம்ப் 1,30,000 டொலர் வழங்கி இருந்ததாகக் கூறப்பட்டுவரும் குற்றச்சாட்டில் ட்ரம்ப் விரைவில் கைதாவார் என்று செய்திகள் வெளியாகின. இந்நிலையில், தன் மீதான குற்றச்சாட்டை ட்ரம்ப் தொடர்ந்து மறுத்துவந்தார்.

எனினும், ட்ரம்ப் உறுதியாக கைதாவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு நடந்தால், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக குற்றவியல் வழக்குப்பதிவு செய்யப்படுவது முதன் முறையாக இருக்கும். இந்த வழக்கில் ட்ரம்ப் கைதுசெய்யப்பட வாய்ப்புள்ளதால் அசம்பாவிதங்களை தவிர்க்க அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்காக அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. நியூயோர்க், வொஷிங்டன், லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க் நகரிலுள்ள ட்ரம்ப் டவர் கட்டிடத்திற்கு வெளியேயும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஒருவேளை ட்ரம்ப் கைதுசெய்யப்பட்டால் அந்த நிகழ்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை விளக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவுப் படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலாகியுள்ளன.





இணையத்தில் வைரலான ட்ரம்பின் போலி கைது படங்கள்

இந்தப் படங்கள் போலியானது என்றாலும் அது தத்ரூபமாக உருவாக்கப்பட்டிருந்ததால் இணையவாசிகள் பலரும் குழப்பமடைந்திருக்கிறார்கள்

முன்னதாக, அமெரிக்காவில் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதில் ட்ரம்ப் தோல்வியடைந்தார். ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன் வெற்றிபெற்றார்.

ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாக ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார். அத்துடன், பல மாகாணங்களில் வழக்கும் தொடுத்தார். அவை அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன. இதற்கிடையில், அமெரிக்காவின் பல பகுதிகளில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் கலவரமாக வெடித்தது. இது அமெரிக்க வரலாற்றில் பெரும் கரும்புள்ளியாக மாறியமை நினைவுகூரத்தக்கது.

உலக செய்திகள்

# ஆப்கானின் - பாகிஸ்தானை உலுக்கிய 6.5 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## 13 பேர் உயிரிழப்பு; நூற்றுக்கணக்கானோர் படுகாயம்


ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் ஏற்பட்ட 6.5 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி இரு நாடுகளிலும் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கான் மற்றும் பாகிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் அதிர்வு இந்தியா, உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் பைசாபாத் நகரிலிருந்து 133 கிலோமீற்றர் தொலைவில் ஹிந்துகுஷ் மலைத்தொடரில் ஏற்பட்ட 6.5 ரிச்டர் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகளில் சிக்கி 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், 50 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானில் 9 பேர் உயிரிழந்துள்ளதுடன், 44 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய தலைநகர் டில்லியில் நேற்றுமுன்தினம் இரவு சுமார் 10 மணியளவில் 2 நிமிடங்கள் வரை இந்நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது. கட்டிடங்கள் குலுங்கி, பொருட்கள் கீழே விழுந்ததால் அச்சமடைந்த மக்கள் வீடுகளை விட்டு குழந்தைகளை தூக்கிக்கொண்டு வீதியில் தஞ்சமடைந்தனர். அதேபோல், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், ஹரியானாவிலும் நிலஅதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.




நிலஅதிர்வு காரணமாக ஜம்மு - காஷ்மீரில் சில பகுதிகளில் தொலைத்தொடர்பு சேவைகள் தற்காலிகமாக பாதிக்கப்பட்டன. இதனிடையே ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஒருமுறை 4.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

# உக்ரைனுக்கு சென்ற ஜப்பான் பிரதமர் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு

ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைனுக்கு ஆதரவளிக்கும் வகையில், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா திடீர் பயணமாக உக்ரைன் தலைநகர் கீவ் சென்றுள்ளார்.

ரஷ்யத் தாக்குதலில் சிதிலமடைந்த புச்சா நகருக்குச் சென்ற புமியோ, போரில் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து, உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியுடன் போர் நிலைவரம் குறித்தும், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் கிஷிடா பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, ஜப்பான் மற்றும் ஜி7 நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என ஜெலன்ஸ்கியிடம், ஜப்பான் பிரதமர் உறுதிளித்தார்.



# என்னை கொலை செய்ய சதி முயற்சி நடைபெறுகிறது

இஸ்லாமாபாத் நீதிமன்ற வளாகத்தில் வைத்து தன்னை கொலை செய்ய முயற்சி நடைபெற்றதாக இம்ரான் கான் குற்றஞ்சாட்டியுள்ளார். ஊழல் குற்றச்சாட்டில், கடந்த சனிக்கிழமை இம்ரான் கான் இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

நீதிமன்ற வளாகத்தில் சாதாரண உடையிலிருந்த உளவுத்துறை அதிகாரிகளை மர்ம நபர்களென குறிப்பிட்ட இம்ரான் கான், அவர்கள் கயிற்றால் தனது கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு, கலவரத்தில் தான் உயிரிழந்துவிட்டதுபோல் நாடகமாடத் திட்டமிட்டிருந்ததாக தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் தனது உயிருக்கு ஆபத்து உள்ளதால், எதிர்வரும் நாட்களில் காணொளி மூலம் வழக்கு விசாரணையை நடத்துமாறு தலைமை நீதிபதிக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்

# இம்ரான் கானுக்கு 3 வழக்குகளில் பிணை



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 3 வழக்குகளில் பிணை வழங்கி லாகூர் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இம்ரான் கான் மீது தற்போதைய ஆளும் அரசு கடந்த 11 மாதங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகளை பதிவுசெய்துள்ளது. இதில் தோஷகானா பரிசுப்பொருள் வழக்கு மற்றும் பெண் நீதிபதியை மிரட்டிய வழக்குகளில் இம்ரான் நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராகாததால் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இதில் பொலிஸாருக்கும், தொண்டர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இது தொடர்பாக பிடிஐ கட்சித் தொண்டர்கள் 500 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், லாகூர் உயர்நீதிமன்றத்தில் இம்ரான் நேற்றுமுன்தினம் ஆஜரானார். அப்போது இஸ்லாமாபாத் நீதிமன்ற வளாகத்தில் வன்முறையில் ஈடுபட்டது தொடர்பான தீவிரவாத வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் இம்ரானுக்கு எதிர்வரும் 27ஆம் திகதிவரை பாதுகாப்புப் பிணை வழங்கி உத்தரவிட்டனர். அதேபோல், லாகூர் உயர் நீதிமன்றத்தில் தோஷகானா வழக்கிலும் இம்ரான் நேற்றுமுன்தினம் ஆஜரானார். இதில் எதிர்வரும் 28ஆம் திகதிவரை அவரை கைதுசெய்ய தடை விதித்து, பாதுகாப்பு பிணை வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

**தீர்ப்பு ஒத்திவைப்பு**

இம்ரான் மீதான தீவிரவாத வழக்குகளில் ஒன்றை இஸ்லாமாபாத் தீவிரவாத ஒழிப்பு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விசாரித்தது. அப்போது, இம்ரான் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சர்தார் மஸ்ரூப் கான், ''நீதிமன்றத்துக்கு வந்தால் இம்ரான் கொல்லப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இஸ்லாமாபாத் உயர்நீமன்ற வளாகத்தில் நடந்ததை நாடே பார்த்தது. எனவே, இந்த வழக்கில் அவர் நேரில் ஆஜராவதிலிருந்து இன்று (நேற்றுமுன்தினம்) விலக்களிக்கவேண்டும்'' என்று கோரினார். இதை கேட்ட நீதிபதி, ''நாடு பார்த்தது. ஆனால், கேபிள் செயற்படவில்லை என்பதால் நீதிமன்றம் பார்க்க முடியவில்லை'' என்று கூறி, இந்த வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# உலகளவில் தண்ணீருக்கு நெருக்கடி ஏற்படும் அபாயம்



காலநிலை மாற்றம் காரணமாகவும், அதிகரித்துவரும் நுகர்வு கலாசாரத்தாலும் உலகளவில் தண்ணீருக்கு நெருக்கடி ஏற்படும் அபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"உலக நாடுகள் ஓர் ஆபத்தான பாதையில் பயணிக்கின்றன. நுகர்வுக் கலாசாரம், காலநிலை மாற்றம், அதிதீவிர வளர்ச்சியினால் தண்ணீர் நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது.

மேலும், அதிகப்படியான நுகர்வு மற்றும் மாசுபாட்டின் காரணமாக நீர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. அதேவேளை, காலநிலை மாற்றங்களும் புவி வெப்பமடைதலை அதிகரித்து நீர் பற்றாக்குறையை தீவிரமாக்கி வருகின்றன. ஆண்டுக்கு 300 கோடி மக்கள் நீர் நெருக்கடியில் வாழ்கின்றனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் நம் கண் முன்னே அரங்கேறி வருகிறது. உலகெங்கிலும் இலட்சக்கணக்கான வனவிலங்குகள் அவற்றின் பாதிப்பை உணர்ந்து வருகின்றன. மனிதர்களும் அதன் தீவிரத்தை கடந்த பத்து ஆண்டுகளாக எதிர்கொண்டு வருகின்றனர். இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு பூமி வெப்பமடைதலை குறைப்பதற்கான செயற்பாடுகளை விரைவாக நகர்த்தவேண்டிய சூழலில் மனித இனம் உள்ளது. விரைவில் அதற்கான நடவடிக்கைகளில் உலக நாடுகள் இறங்கும் என்று நம்புவோம்.

# சோமாலியாவில் கடும் பஞ்சம்!

## 43,000 பேர் உயிரிழப்பு



சோமாலியாவில் 40 ஆண்டுகளில் இல்லாதளவிற்கு நிலவும் கடும் பஞ்சத்தால் கடந்த ஆண்டு மட்டும் 43,000 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க தீபகற்பத்தில் வறட்சியால் அறிவிக்கப்பட்ட முதல் அதிகாரப்பூர்வ இறப்பு எண்ணிக்கை இதுவாகும். இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் குறைந்தது 18,000 பேர் மற்றும் 34,000 பேர் உயிரிழக்கக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிறுவனம் மற்றும் லண்டன் ஸ்கூல் ஒவ் ஹைஜீன் எண்ட் ட்ராபிகல் மெடிசின் மூலம் வெளியிடப்பட்ட அறிக்கையில், வறட்சியால் உணவுப் பற்றாக்குறை, கொலரா போன்ற நோய்களுடன் ஊட்டச்சத்து குறைபாடும் ஏற்பட்டு இறப்பு விகிதம் அதிகரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. காலநிலை மாற்றம் மற்றும் பாதுகாப்பின்மை ஆகியவற்றால் பல்லாயிரக்கணக்கான கால்நடைகளும் உயிரிழந்துள்ளன. அரை மில்லியன் குழந்தைகள் இந்த ஆண்டு கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளது.

# கலிபோர்னியாவை சூறையாடிய புயல்; வெள்ளத்தில் மிதக்கும் முக்கிய நகரங்கள்



ஏற்கனவே புயலால் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் மீண்டும் வீசிய புயலால் பெரும் வெள்ளப்bபருக்கு ஏற்பட்டுள்ளது.

புயல் காற்றில் பல்வேறு இடங்கள் தண்ணீரால் சூழப்பட்டுள்ள நிலையில், தற்போது வீசிய புயல் காற்றால் கடும் மழை பெய்துவருகிறது. இதனால் பல இடங்களில் வீதிகள் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளன. போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. புயலின் காரணமாக பொதுமக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர். வெள்ளம் ஏற்பட்டுள்ள இடங்களில் முதல் கட்டமாக மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



வட்டவளை மீனாட்சி தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பங்குனி உற்சவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்... (கினிகத்தேனை நிருபர்)

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com



மலையகத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்துவருவதால் பண்டாரவளை – பூனாகலை, கொஸ்லந்தை, கபரகலை பிரதான பாதைகளில் கற்பாறைகள், மண்மேடுகள் சரிந்துள்ளன. அத்தோடு தொலைத்தொடர்பு மற்றும் மின்கம்பங்கள், மரங்கள் பாதைகளில் சரிந்து வீழ்ந்துள்ளதால் குறித்த பகுதியில் மீட்பு பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இதனால் மேற்படி வீதியூடான வாகனப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. (பதுளை நிருபர்)

# கிளைகளை வெட்டுவதாகக் கூறி மரங்களை மொட்டையடிக்கும் ஆசாமிகள்



## விலையுயர்ந்த சைப்ரஸ் மரங்களை வெட்டி விறகாக்க அனுமதி கொடுத்தது யார்?

நுவரெலியா சுற்றாடல் பாதுகாப்பு குழுத்தலைவர் மகிஹிந்த தொடபேகமகே கேள்வி



(செ.திவாகரன்)

இலங்கையின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா நகரமாகிய நுவரெலியாவின் அழகிற்கு பெருமை தேடி கொடுக்கும் 'சைப்ரஸ்' மரங்கள் விறகுக்காக வெட்டப்படுகின்றன. இதற்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்பது எவருக்கும் தெரியாதுள்ளது என நுவரெலியா மாநகரசபையின் முன்னாள் முதல்வரும் நுவரெலியா சுற்றாடல் பாதுகாப்பு குழுத்தலைவருமான மகிஹிந்த தொடபேகமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

''நுவரெலியாவில் கடந்த 150 வருடங்களுக்கு முன் நாட்டப்பட்ட மரங்கள் கடந்த பல நாட்களாக வெட்டப்பட்டு வருகின்றன. இதற்கு அனுமதி வழங்கிய யார் என்பது தெரியாமலுள்ளது.

சைப்ரஸ் மரங்களின் கிளைகள் வெட்டுவதாக கூறி மரங்கள் மொட்டையாக வெட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவதால் நுவரெலியாவின் இயற்கை அழகிற்குபாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. அத்தோடு மரங்கள் வெட்டப்படுவதால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு காலநிலையிலும் மாற்றங்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றன.

நுவரெலியா நகரிலுள்ள 'சைப்ரஸ்' மரங்களை விறகுக்காக வெட்ட அனுமதித்த பலசாலி யார்? கிளைகளை வெட்டுகிறோம் என்ற போர்வையில் பல வாரங்களாக மரங்கள் அகற்றப்பட்டுவருகின்றன. கடந்த காலங்களில் தர்மபால சுற்று வட்டாரத்திற்கு அருகிலுள்ள மரங்கள் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. அந்த இடம் தற்போது தனியார் ஹோட்டலொன்றின் உரிமையாளரின் வாகன தரிப்பிடமாக காட்சியளிக்கின்றது. நுவரெலியா நகரத்திற்கு செல்லும் பிரதான வீதியில் இரு பக்கங்களிலுமுள்ள விலையுயர்ந்த சைப்ரஸ் மரங்களும் காரணமின்றி வெட்டப்படுகின்றன.

நுவரெலியா மாநகரசபையில் நகரை அழகு படுத்துவதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் நுவரெலியா நகரிலுள்ள சகல அரச திணைக்களத்திலுள்ள உயர் அதிகாரிகளும் அங்கம் வகிக்கின்றனர். அந்தக் குழுவிலும் அனுமதி பெறாமல் இவ்வாறு மரங்கள் வெட்டப்படுகின்றன. நுவரெலியா நகரத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்றன. எனவே நகரிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதை நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என அவர் தெரிவித்தார்.

# கபரகலை மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த இ.தொ.கா. தலைவர்



(பதுளை நிருபர்)

பண்டாரவளை – கபரகலை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டோரை இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பதுளை மாவட்ட அரச அதிபர் தமயந்தி பரணகம ஆகியோர் நேற்று (22) நேரில் சென்று சந்தித்தனர்.

கபரகலை பெருந்தோட்டப்பிரிவில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற மண்சரிவில் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களைச்சேர்ந்த 240 பேர் அம்பிட்டிக்கந்தை தேயிலைத் தொழிற்சாலைக் கட்டடத்தொகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று (22) பதுளை மாவட்ட அரச அதிபர் தமயந்தி பரணகம மற்றும் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் அங்கு சென்று இடைத்தங்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து, அவர்களின் குறைகளைக்கேட்டறிந்து கொண்டதுடன், அவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளையும் பெற்றுக்கொடுத்தனர்.

# பசறை – மொனராகலை வீதி விபத்தில் காயமடைந்த தந்தையும் உயிரிழப்பு

(நடராஜா மலர்வேந்தன்)



பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பசறை மொனராகலை வீதி தொழும்புவத்தை 3ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பசறை பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றும் லொறியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 19 வயதுடைய மீதும்பிட்டி கலபொட பகுதியை சேர்ந்த இளைஞர் சம்பவ இடத்தில் உயிரிழந்த நிலையில், குறித்த இளைஞனின் தந்தை (வயது 50) படுகாயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த தந்தை மற்றும் மகன் ஆகிய இருவரும் பசறை மீதும்பிட்டி கலபட பகுதியை சேர்ந்தவர்கள்.

பசறை மொனராகலை வீதி தொழும்புவத்தை 3ஆம் கட்டைப் பகுதியில் பசறையில் இருந்து மொனராகலை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றும் மொனராகலையிலிருந்து பசறை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

பசறை பகுதியிலிருந்து மொனராகலை நோக்கி சென்று கொண்டிருந்த லொறிக்கு முன்னால் சென்று கொண்டிருந்த லொறியொன்று வீதியின் நடுவில் நிறுத்தப்பட்டதால் பின்னால் சென்ற லொறி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியை முந்திச்செல்ல முற்பட்ட வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இரண்டு லொறிகளின் சாரதிகளும் பசறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரையும் பதுளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் விசேட நிதியுதவி

(யாழ். நிருபர்)

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு இந்திய அரசாங்கத்தினால் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் தலா 5ஆயிரம் ரூபா விசேட நிதியுதவி வழங்கப்படவுள்ளது. இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார் என்று தெரியவருகிறது.

இந்திய அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும், அந்தக் கடிதத்தில், ''கடந்த மாதம் 11ஆம் திகதி, யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக வந்திருந்த இராஜாங்க கலாநிதி எல்.முருகன் அறிவித்தபடி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு விசேட நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் தெரிவுசெய்யப்பட்டு முன்மொழியப்படும் ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து, அடுத்துவரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களிலிருந்தும் இளநிலைப் பட்டதாரி மற்றும் பட்ட பின் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாகத் தெரிவுசெய்யப்படலாம். நான்கு இளநிலை மாணவர்களுக்கு ஒரு பட்டப்பின் படிப்பு மாணவர் என்ற அடிப்படையில் தெரிவு இடம்பெறும். இதற்கென இந்தியத் தூதரகத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கமைய





பொருளாதார நிலையில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் பற்றிய இந்தியத் தூதுவரின் கடிதம் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் பேராசிரியர் கே.சசிகேஷ் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வட்டாரங்கள் உறுதிசெய்துள்ளன.

# யாழ். நாகர்கோவிலில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவரின் படகுகளுக்குத் தீ வைப்பு!

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணம் நாகர்கோவில் கடற்கரை பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 10 படகுகள் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

புத்தளம் தில்லையடி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு சொந்தமான படகுகளே தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கடலட்டை தொழிலை முன்னெடுக்கும் முகமாக புத்தளம் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நாகர்கோவில் பகுதிக்கு கொண்டுவரப்பட்ட படகுகள், தொழிலில் ஈடுபடுத்தப்படாமல் நீண்டகாலமாக கடற்கரை பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்துள்ளது.

இந்நிலையில், நேற்று (22) புதன்கிழமை அதிகாலை குறித்த 10 படகுகளுக்கும் இனந் தெரியாத நபர்கள் தீ வைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சரசாலை—குருவிக்காட்டு சூழலில் சிரமதானப் பணி முன்னெடுப்பு



(சாவகச்சேரி நிருபர்)

வனவளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வன தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (21) செவ்வாய்க்கிழமை காலை சரசாலை-குருவிக்காட்டு சூழலில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இயற்கைக் காடான குருவிக்காட்டில் இயற்கைக்கு கேடு விளைவிக்கும் வகையில் அறிவுறுத்தல்களையும் மீறி விஷமிகளால் கழிவுகள் கொட்டப்படும் நிலையில் குறித்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டு ஆங்காங்கே விழிப்புணர்வு பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

குருவிக்காட்டு பகுதியில் வீதியின் இருமருங்கும் பெருமளவான மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாகவும் அது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து உரியவர்களை கண்டறிந்து சட்டத்தின் முன்நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் வனவளத் திணைக்களத்தினர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த சிரமதான நிகழ்வில் வனவளத் திணைக்கள அதிகாரிகள், சுற்றுச்சூழல் அதிகாரசபையினர், தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி பிரதேச சபையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடம்பன் உயிலங்குளம் வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் பலி; இருவர் படுகாயம்



(மன்னார் நகர் நிருபர்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் உயிலங்குளம் பிரதான வீதியில் நேற்று முன்தினம் (21) மாலை 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து குறித்து மேலும் தெரிய வருவதாவது,

அடம்பனிலிருந்து உயிலங்குளம் நோக்கி வயோதிபர் ஒருவர் மோட்டார்சைக்கிளில் பயணித்துள்ளார். இதன்போது உயிலங்குளத்திலிருந்து அடம்பன் நோக்கி 2 இளைஞர்கள் மோட்டார்சைக்கிளில் பயணித்தபோது குறித்த இரண்டு மோட்டார்சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதன்போது உயிலங்குளத்திலிருந்து அடம்பன் நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்ற இளைஞர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஏனைய இருவரும் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரும் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த அடம்பன் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் சிசுவின் சடலம் மீட்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்திலிருந்து சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் மேல் மாடியிலுள்ள விடுதி ஒன்றிலிருந்து குறித்த சிசு வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். போதனாவில் சிகிச்சைபெற்று வந்தவர்களுக்கிடையில் மோதல்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த இரு நோயாளிகள் மோதிக்கொண்டமையை அடுத்து இருவரும் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த இருவர் நேற்று புதன்கிழமை வைத்தியசாலை நோயாளர் விடுதிக்குள் தமக்குள் மோதிக்கொண்டனர்.

அதனையடுத்து இருவருக்கும் இடையிலான மோதலை வைத்தியசாலை பாதுகாப்புப் பிரிவினர் தடுத்து நிறுத்தியதுடன், வைத்தியசாலை பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

அதனையடுத்து பொலிஸார் இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கடலுணவுகளின் ஏற்றுமதி வருமானம் முறையாக நாட்டுக்கு கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள்




கடலுணவுகளின் ஏற்றுமதியின்மூலம் நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணி முறையாக பேணப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையில், கடலுணவு ஏற்றுமதியின்மூலம் பெறப்படும் அந்நியச் செலாவணி முறையாக கிடைப்பதை உறுதிசெய்வது மீன் ஏற்றுமதியாளர்களின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதிசெய்வோர் தற்போதைய நிலையில் எதிர்கொண்டுள்ள சவால்கள் மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் கடலுணவுகளுக்கான வருமானம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து மீன்களை வரவழைத்து மீள் ஏற்றுமதிசெய்வதன்மூலம் உள்ளூர் மீன் தட்டுப்பாடு நிலவும் வேளையில் தமது தொழிலை சீராக பேண சந்தர்ப்பம் வழங்குமாறு ஏற்றுமதியாளர்கள் விடுத்த கோரிக்கையை கவனத்திலெடுத்த கடற்றொழில் அமைச்சர், எமது நாட்டைச் சுற்றி கடல்வளமும் நாட்டினுள் நீர்வேளாண்மைக்கு ஏதுவான சூழலும் நிறைந்திருக்கும் நிலையில், தேவையான கடலுதவிகளை நாமே உற்பத்திசெய்ய வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பாக இருப்பதாகவும், எவ்வாறெனினும் குறித்த கோரிக்கை தொடர்பாக விரிவாக கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதேபோன்று பல நாள் மீன்பிடிப்படகுகளின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி, நியாயமான - நிலையான விலையை நிர்ணயித்துக்கொள்ளுமாறும் பலநாள் கடற்றொழிலாளர்களின் மீன்பிடி கலன்களில் கடலுணவுகளைப் பாதுகாக்கும் பொருட்டு, தொழில்நுட்பக் கருவிகளைப் பொருத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் கடற்றொழில் அமைச்சர் ஏற்றுமதியாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உட்பட அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக டிலான் பெரேரா



நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா நேற்று முன்தினம் (21) பாராளுமன்றத்தில் தெரிவுசெய்யப்பட்டார்.

இவருடைய பெயரை பாராளுமன்ற உறுப்பினர் மாயாதுன்ன சிந்தக அமல் முன்மொழிந்ததுடன், கெவிந்து குமாரதுங்க இதனை வழிமொழிந்தார்.

ஆளும் கட்சி உறுப்பினரால் தனது பெயர் முன்மொழியப்பட்டு, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரினால் வழிமொழியப்பட்டு குழுவின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமையையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகக் டிலான் பெரேரா இங்கு குறிப்பிட்டார்.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இழப்பீடுகள் பற்றிய அலுவலகம், சமூகத்தை அடிப்படையாகக்கொண்ட சீர்திருத்தத் திணைக்களம், அரசாங்க மொழிகள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களைக் குழு முன்னிலையில் கலந்துரையாடல்களுக்கு அழைக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குழு உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, குலசிங்கம் திலீபன், மயாதுன்ன சிந்தக அமல், கெவிந்து குமாரதுங்க, (திருமதி) ரஜிகா விக்ரமசிங்க, எம்.ஏ.சுமந்திரன், இசுரு தொடங்கொட ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# வங்கித் தொழில் - நிதிச் சேவைகள் பற்றிய குழுவின் தலைவராக காமினி லொக்குகே போட்டியின்றித் தெரிவு





வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவின் தலைவர் பதவிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே நேற்று முன்தினம் (21) போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

இராஜாங்க அமைச்சர் அநுப பஸ்குவல் இவருடைய பெயரை முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்கு இதனை வழிமொழிந்தார்.

இந்தக் குழு நேற்று முன்தினம் (21) பாராளுமன்றத்தில் கூடியிருந்ததுடன், குழுவின் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக குழுவின் தலைவர் இங்கு தெரிவித்தார்.

அத்துடன், குழுவின் விடயதானத்துக்கு உட்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளை அழைத்துக் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் குழு இணங்கியது.

இலங்கையில் வங்கித் தொழில், காப்புறுதி மற்றும் ஏனைய நிதித்துறை சேவைகளின் செயற்பாடுகள் தொடர்பில் கொள்கை ரீதியான விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் பர்கி பாகிஸ்தான் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க மற்றும் நிலையத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசீம் உமர் ஆகியோரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் சந்தித்தபோது...

# இவ்வருடத்தில் இதுவரை பொலிஸ் சேவையிலிருந்து 260 பேர் விலகல்

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து 260 பேர் அறிவிப்பு வழங்காமல் சேவையிலிருந்து விலகியுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பெரும்பாலானோர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் சார்ஜன்ட்கள் என பொலிஸ் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் மன அழுத்தம், பொருளாதாரப் பிரச்சினைகள், அதிக வேலைப்பளு மற்றும் கடமையின் அழுத்தம், ஓய்வின்மை போன்ற காரணங்களால் பொலிஸ் சேவையை விட்டு விலகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவர்கள் அனைவரையும் பொலிஸ் சேவையை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் கடந்த வருடம் மாத்திரம் 900 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.






இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை நேற்று (22) புதுடில்லியில் சந்தித்தார்.

# கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் நிலைகள் குறித்து ஐக்கிய இராச்சியத் தரப்பினருக்கு அலி சப்ரி எடுத்துரைப்பு





கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் மேம்பட்ட நிலைகள் குறித்து அமைச்சர் அலி சப்ரி, ஐக்கிய இராச்சியத் தரப்பினருக்கு எடுத்துரைத்ததுடன், செயன்முறையை விரைவுபடுத்துவதில் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்கு இருதரப்புக் கடன் வழங்குநர்கள் மற்றும் பரிஸ் கழக உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

லண்டனில் நடைபெற்ற 22ஆவது பொதுநலவாய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் கூட்டத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி பங்கேற்றார். இந்த விஜயத்தின்போது, உறுப்புநாடுகளின் பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் கொள்கைகளை அடையாளப்படுத்தும் பொதுநலவாய சாசனத்தில் காலஞ்சென்ற மகாராணி கைச்சாத்திட்டு 10 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையிலான பொதுநலவாய தின விழாக்களிலும் அவர் கலந்துகொண்டார்.

பொதுநலவாய தலைமையகத்தில் நடைபெற்ற பொதுநலவாய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் சப்ரி,

இலங்கையின் சுறுசுறுப்பான ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான காலநிலை நிதியுதவியின் கருப்பொருட்கள், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பிற்காக பொதுநலவாய நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்துதல், டிஜிட்டல் மற்றும் பசுமையான எதிர்காலத்திற்கான இரட்டை மாற்றத்தை ஆதரிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் ஜனநாயகத்தின் மூலம் நெகிழ்ச்சியான சமூகங்களை உருவாக்குதல் ஆகியன குறித்தும் கருத்து வெளியிட்டார்.

பொதுநலவாயம் ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் டிஜிட்டல் சொத்துகள் மீதான ஒழுங்குமுறைகளை செயற்படுத்துவதற்காக ஒரு மத்திய அமைப்பை அமைப்பதன் அவசியத்தை அவர் வெளிப்படுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முதன்முதலில் முன்மொழியப்பட்ட காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை இலங்கையில் அமைப்பது குறித்தும் அவர் கவனம் செலுத்தினார்.

பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட் கே.சி. உடனான அவரது சந்திப்பின்போது, இலங்கையின் நிலையான அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்காக பொதுநலவாயத்தில் ஈடுபடுவது குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு பொதுநலவாய அபிவிருத்தி அலுவலகத்தில் இந்தோ - பசிபிக் இராஜாங்க அமைச்சர் அன்னே-மேரி ட்ரெவெல்யனை சந்தித்தார். குறிப்பாக, பொருளாதாரத்தில் கவனம் செலுத்தி இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை மேலும் மேம்படுத்தும் வகையில், இலங்கைக்கான பிரித்தானியப் பிரதமரின் வர்த்தகத் தூதுவரான அபெர்சொச் பிரபு மேர்வின் டேவிஸ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சப்ரியை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த இரண்டு சந்திப்புகளிலும் அமைச்சர் சப்ரி, கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் மேம்பட்ட நிலைகள் குறித்து ஐக்கிய இராச்சியத் தரப்பினருக்கு எடுத்துரைத்ததுடன், செயன்முறையை விரைவுபடுத்துவதில் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்கு இருதரப்புக் கடன் வழங்குநர்கள் மற்றும் பரிஸ் கழக உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், பொதுநலவாய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் கூட்டத்தின் பக்க அம்சமாக அமைச்சர் சப்ரி, ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு அலுவல்கள், பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகச் செயலாளர் ஜேம்ஸ் கிளெவர்லி மற்றும் மலேசியா, ருவாண்டா ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் பாகிஸ்தானின் வெளிநாட்டு இராஜாங்க அமைச்சர் ஆகியோரை சந்தித்தார்.

லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினால் இலங்கைத் தேயிலை சபையுடன் இணைந்து ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த சிலோன் டீ தொடர்பாக ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத்தில் அமைச்சர் சப்ரி கலந்துரையாடினார்.

இந்த அமர்வில், வெளிநாட்டு அமைச்சரும் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சருமான நைஜல் ஹடில்ஸ்டனின் கருத்துகளும் இடம்பெற்றன.

# பேருவளை அம்பேப்பிட்டிய பாலர் பாடசாலையின் 25ஆவது ஆண்டு விழா







(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை அம்பேப்பிட்டிய (GENIUS) பாலர் பாடசாலையின் 25ஆவது வருட பூர்த்தி விழா, வருடாந்த பரிசளிப்பு வைபவம் சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை மர்ஹூம் எஸ்.எம்.ஜாபீர் ஹாஜியார் மண்டபத்தில் அதிபர் ஹஸனியா அமான் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மேல்மாகாண முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜமீல், சீனன்கோட்டை ஆரம்பப் பாடசாலை அதிபர் எம்.வை.எவ்.ஜெஸீலா, அஸாத் பவுண்டேசன் தலைவர் கலாநிதி எம்.எஸ்.எம்.ஸாதிக், கலாநிதி எம்.ரி.ஏ.யொஹான் பெரேரா ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டனர்.

சமூகசேவையாளர் ரிஸான் பாஸி, அகில இலங்கை அஹதியா அமைப்பின் செயலாளரும் சமூகசேவையாளருமான சாமஸ்ரீ தேசகீர்த்தி ஏ.எல்.எம்.அஸ்வர், எலொன் கல்லூரி பணிப்பாளர் மபாஸ் மக்கி ஆகியோர் விசேட பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர்.

சிறார்கள் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு, பாடசாலையில் கல்வியை பூர்த்திசெய்து வெளியேறும் 15 சிறார்கள் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சீனன்கோட்டை ஆரம்பப் பாடசாலை உப அதிபர் எம்.எஸ்.எஸ்.ஹரீஸா, ஸாக்கிரா இஸ்லாமிய குரான் மத்ரஸா அதிபர் எம்.எம்.என்.பர்ஸானா, அஸாத் பவுண்டேசன் செயலாளர் எம்.ஜே.எவ்.நஸ்ரினா, GENIUS பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம்.அமான் கலீல் உட்பட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவில் மாணவர் மன்ற நிகழ்ச்சியும் பரிசளிப்பு நிகழ்வும்





(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவில் ரமழான் மாத விடுமுறையையெட்டி மாணவர் மன்ற நிகழ்ச்சியும் பரிசளிப்பு வைபவமும் அதிபர் மௌலவி எஸ்.எச்.எம்.இம்ரான் (ஹுமைதி) தலைமையில் மத்ரஸா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஸாக்கிரீன் பள்ளிவாசல் பரிபாலன கமிட்டி செயலாளர் அஷ்ஷெய்க் மக்கி மன்ஸூர் (நளீமி) பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கிராஅத், கிராஅத் மனனம், கஸீதா, இஸ்லாமிய கீதம், பேச்சு, கேள்வி-பதில் (அறிவுக் களஞ்சியம்) உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு, நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள் இதில் பங்குபற்றினர்.

# அதிக விலையில் முட்டை விற்பனை

## நால்வருக்கு ரூ. 12 இலட்சம் அபராதம்



கட்டுப்பாட்டு விலையைக் கருத்திற் கொள்ளாமல், முட்டையை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு, 12 இலட்சம் ரூபா அபராதத்தை விதித்து கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

42 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள வெள்ளை முட்டையை 52 ரூபாவுக்கு நான்கு வர்த்தகள் விற்பனை செய்துள்ளனர்.

பொரலஸ்கமுவ, போகுந்தர மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வர்த்தகர்களே அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்துள்ளனர்.

அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

# அக்கரைப்பற்று வீதியில் விபத்து: ஒருவர் உயிரிழப்பு

(திகாமடுல்ல செய்தியாளர்)

இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதினாபுரம் அக்கரைப்பற்று பிரதான வீதி சந்தி அருகில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து புதன்கிழமை(22) காலை இடம்பெற்றதுடன் இதில் இறக்காமம் 4ஆம் பிரிவைச் சேர்ந்த அமீர் என்பவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு நபரும் இதில் பாரிய காயங்களுடன் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை மாவட்ட செயலாளருடன் ஜைக்கா நிறுவன பிரதிநிதிகள் சந்திப்பு

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் பெண்களை தொழில் முயற்சியாளர்களாக மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள நான்கு வருட JICA (ஜைக்கா) ஜப்பானிய செயற்றிட்டம் தொடர்பில் ஜைக்கா நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸுக்குமிடையிலான சந்திப்பொன்று மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்றது.

ஜைக்கா நிறுவனத்தின் சார்பில் ஜப்பானிய பிரதிநிதி தகாசுமி சகுரசாவ மற்றும் இலங்கைக்கான திட்ட நிபுணர் பிரசாந்த் நிஷங்க, அம்பாறை மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேகா எதிரிசிங்க ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.



இத்திட்டத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் இக்குழுவினர் அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டதுடன் அரசாங்க அதிபரால் ஜைக்கா நிறுவனப்பிரதிநிதிகள் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# சோளார் செய்கைக்காக விவசாயக் காணிகளை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(கிரான் செய்தியாளர்)





மட்டக்களப்பு வாழைச்சேனை கமநல திணைக்களத்திற்குட்பட்ட வாகனேரி, மதுரங்கேணி, சாப்பமடு கமநல அமைப்பு விவசாயிகள் புதன்கிழமை (22) வாழைச்சேனை கமநல திணைக்களத்திற்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தனியார் நிறுவனம் ஒன்றினால் சோளார்(Solar) செய்கைக்காக 352 ஏக்கர் விவசாயக் காணிகளை கையகப்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது "எங்கள் வயல் காணிகளை அபகரிக்காதே, விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர், பல ஆண்டுகள் செய்து வந்த காணிகள் எங்களுக்கே உரியது, சோளார் பவர் எமக்கு வேண்டாம்" போன்ற வாசகங்களை அட்டையில் ஏந்தியவாறு விவசாயிகள் கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது கருத்து தெரிவித்த விவசாயிகள், இது எங்கள் நிலம். எங்களுக்கு சோளார் மின்சாரம் வேண்டாம். எங்கள் நிலத்திற்கு பதிலாக மாற்று நிலங்கள் தேவை இல்லை. காலங்காலமாக வேளாண்மை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் நாம் இன்றும் சிறுபோக விவசாயச்செய்கையில் ஈடுபடு வருகின்றோம் என்றனர்.

குறித்த இடத்திற்கு வருகை தந்த கமநல அபிவிருத்தி திணைக்களப்பிரதி ஆணையாளர் கே.ஜெகநாத்திடம் இதன்போது மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆணையாளர், இவ் விடயம் தொடர்பில் தனக்கு தெரியாது என்றும் இது தொடர்பில் எந்த நிறுவனங்களும் வந்து தன்னை சந்திக்கவில்லை என்றும், ஆராய்ந்து பார்த்து தமது பதிவுக்குட்பட்ட விவசாயிகளில் எத்தனை பேருக்கு விவசாயக் காணி உள்ளது என்பதை ஆணையாளர் நாயகத்துக்கு தெரியப்படுத்துவதாக தெரிவித்தார்.

# மாளிகைக்காடு, காரைதீவு பிரதேச உணவகங்களில் திடீர் சோதனை

## பழுதடைந்த உணவுகளும் கைப்பற்றப்பட்டன



(மாளிகைக்காடு செய்தியாளர்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தும் நோக்கில் காரைதீவு மற்றும் மாளிகைக்காடு பிரதேசத்தில் உணவு தயாரிக்கும் மற்றும் விற்பனை செய்யும் உணவு நிலையங்களில் நேற்று புதன்கிழமை(22) திடீர் பரிசோதனையும் முற்றுகையும் இடம்பெற்றது. இதன்போது பொதுமக்களின் நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் கைப்பற்றப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் மற்றும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லிமா வஸீர் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் பைஸல் முஸ்தபாவின் தலைமையில் உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப்பெட்டிகளில் வைத்திருத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன சுகாதார பரிசோதகர்களான ஏ.எம்.ஜெமீல், ஏ.எல்.எம்.சப்னூஸ் ஆகியோரால் பரிசோதிக்கப்பட்டது.

நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது உணவு சட்ட நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் இனிவரும் காலங்களில் இரவு நேர உணவு நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் வாராந்தம் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில்

# கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கிடையில் விசேட கூட்டம்

(கிண்ணியா செய்தியாளர், அப்துல்சலாம் யாசிம்)

உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்தமையால் கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கிடையிலான விசேட கூட்டம் செவ்வாய்க்கிழமை (21) ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நிறுவப்பட்ட 45 உள்ளூராட்சி மன்றங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மார்ச் 19 நள்ளிரவு முதல் நாட்டின் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டுள்ளதால், அதன் அனைத்து நிர்வாக விவகாரங்களும் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் பொறுப்பில் உள்ளன. உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்குச் செய்யும் பணிகளைத் தொடர தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார். அதுமட்டுமின்றி, அந்த நிறுவனங்களின் நடவடிக்கையை பாதிக்கும் சட்ட விதிமுறைகள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் குறித்தும் அவர்கள் விரிவாக கலந்துரையாடினர்.



பொதுமக்களுக்கு சேவை செய்யும்போது பெறும் சம்பளத்துக்கு மேலதிகமாக சேவையை செய்ய வேண்டும் என ஆளுநர் அறிவுறுத்தினார். இதில் மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண முதலமைச்சின் பதில் செயலாளர், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முத்துபண்டா, உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் மற்றும் துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# அஷ்- ஷுஹதா வித்தியாலயத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா













(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி மட்/மம/அஷ்-ஷுஹதா வித்தியாலயத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா செவ்வாய்க்கிழமை (21) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் எம்.சீ.எம்.முனீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச கல்விப் பணிப்பாளர் எம்.எம்.கலாவுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் காத்தான்குடி ஆசிரியர் மத்திய நிலையத்தின் முகாமையாளர் ஏ.நியாஸ் விசேட அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார். இந் நிகழ்வின்போது ஆசிரியர்கள், மாணவர்கள் பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் நினைவு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கவிஞர் அன்புடீன் காலமானார்



(திராய்க்கேணி, மருதமுனை செய்தியாளர்கள்)

தேசிய ரீதியில் புகழ்பெற்ற கவிஞரும் பன்னூலாசிரியரும் இலக்கியச் செயற்பாட்டாளருமான ஆசுகவி அன்புடீன் (கலந்தர்லெப்பை) தனது 72 ஆவது வயதில் புதன்கிழமை (22) காலமானார்.

பாலமுனையை பிறப்பிடமாகவும் அட்டாளைச்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், இலக்கியச் செயற்பாட்டில் பொன்விழா கண்ட இலக்கிய ஆளுமையாவார். நூற்றுக்கு மேற்பட்ட கவிதை நூல், கதை புத்தகங்கள், கட்டுரை நூல்களையும் எழுதி தேசிய ரீதியில் விருதுகளைப் பெற்ற இவரது மறைவு இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும்.

# "சிட்டுக்களின் சிறகசைவு 2023" எனும் தொனிப்பொருளில் கௌரவிப்பு நிகழ்வு



(பொத்துவில், அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்கள்)

அட்டாளைச்சேனை ரி.பி.ஜாயா வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலைமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (20) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

"சிட்டுக்களின் சிறகசைவு 2023" எனும் தொனிப்பொருளில் பாடசாலை அதிபர் ஓ.எல்.எம்.றிஸ்வான் தலைமையில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவின் போதே குறித்த மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எஸ்.அம்ஜத்கான், ஏ.எம்.நௌபர்டீன் ஆகியோர் பிரதம அதிதியாகவும், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றஸ்மி கௌரவ அதிதியாகவும், ஆசிரிய ஆலோசகர்களான எஸ்.எல்.மன்சூர், எம்.எல்.ஜாபிர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டிருந்தனர்.

புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் மற்றும் பல்வேறு துறைகளிலும் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களும் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் என பெருந்திரளானோர் கலந்துகொண்ட குறித்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு!






(கல்லடி செய்தியாளர்)

பட்டிருப்பு கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (20) மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. போரதீவுப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் கலந்து கொண்டிருந்தார்.

பட்டிருப்பு கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் நீற்றா - கலைச்செல்வனின் ஒழுங்கமைப்பில் களுதாவளை சமூக பொருளாதார கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையில் போரதீவுப்பற்று கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 470 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், சமூக பொருளாதார கல்வி அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com





திருகோணமலை Success Pre School முன்பள்ளி சிறார்களின் கலைவிழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வு சனிக்கிழமை(18) திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரி ஆரம்ப பிரிவு பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வானது Success Pre School முன்பள்ளி பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி சாஷியா முபாரக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவி பணிப்பாளர் சிவப்பிரகாசம் உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (கிண்ணியா செய்தியாளர்)





உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு கமு/கமு/ மஹ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் பற்சிகிச்சைப் பிரிவு திங்கட்கிழமை (20) திறந்து வைக்கப்பட்டது. "நலமான வாய் பெருமை; ஆயுள் நீள புன்னகை" எனும் தொனிப்பொருளில், பாடசாலை அதிபர் றிப்கா அன்சார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வாய் சுகாதாரம் பற்றி பல் வைத்தியர்களால் மாணவர்களுக்கு செய்முறை மூலம் விளக்கமளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (வொலிவேரியன் செய்தியாளர்)

# கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளராக காலிஸ் நியமனம்



(கிண்ணியா, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளராக எம்.எஸ்.ஏ.காலிஸ் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் செவ்வாய்க்கிழமை(21) மாலை நியமிக்கப்பட்டார். மாகாண விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றிய கலாநிதி மொஹமட் ஹுசைன் ஓய்வுபெற்றதன் காரணமாக குறித்த பதவி வெற்றிடமாக இருந்தது. அவ்விடத்துக்கு அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதன்போது மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முத்துபண்டா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# எல்லேவல நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்றவர்களில் நால்வர் நீரில் மூழ்கிப் பலி

## பிரதேச மக்களின் கண்ணீருக்கு மத்தியில் சடலங்கள் நல்லடக்கம்



(மாவடிப்பள்ளி, சம்மாந்துறை செய்தியாளர்கள், எஸ்.அஷ்ரப்கான்)

வெல்லவாய, எல்லேவல நீர்வீழ்ச்சியில் செவ்வாய்க்கிழமை (21) குளிக்கச்சென்று நீரில் மூழ்கி காணாமல்போன கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த 04 இளைஞர்களும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக நேற்று புதன்கிழமை (22) மீட்கப்பட்டுள்ளனர்.

கல்முனையிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி பயின்றுவந்த 10 பேர் கொண்ட மாணவர்கள் குழுவொன்று கல்முனையிலிருந்து வெல்லவாய, எல்லேவல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காக சுற்றுலா சென்றுள்ளது. இவர்களில் நால்வர் நீரில் இழுத்துச்செல்லப்பட்ட நிலையில் காணாமல்போயிருந்தனர். இதில் காணாமல்போன சம்மாந்துறையைச் சேர்ந்த அஹ்மட் லெப்பை அப்சாலின் உடல் மட்டும் வெல்லவாய பொலிஸார் இப்பிரதேச பொதுமக்கள் மற்றும் சுழியோடிகள் இணைந்து மேற்கொண்ட தேடுதலையடுத்து செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டது.

இருப்பினும், அன்றையதினம் பிரதேசத்தில் பெய்துவந்த கடும் மழையையடுத்து ஏனைய சடலங்களைத் தேடும் பணிகள் மாலை 5.30 மணியளவில் நிறுத்தப்பட்டதுடன், மீண்டும் புதன்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்டபோது ஏனைய மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து பிரேத பரிசோதனைக்காக சடலங்கள் வெல்லவாய பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு புதன்கிழமை இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது.

கல்முனைக்குடி பள்ளி வீதியைச் சேர்ந்த முஹம்மட் சுஹ்ரி லாபிர் மற்றும் ஹனீபா வீதியைச் சேர்ந்த அபூபக்கர் ஹனாப், சாய்ந்தமருது 16ஆம் பிரிவைச் சேர்ந்த முகம்மட் முக்தார் முகம்மட் நௌபீஸ் மற்றும் சம்மாந்துறையைச் சேர்ந்த அஹ்மட் லெப்பை அப்ஸால் ஆகிய நான்கு இளைஞர்களுமே இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

குறித்த நீர்வீழ்ச்சிக்கு குளிக்கச்சென்று உயிரிழந்த 4ஆவது சம்பவமாக இச்சம்பவம் பதிவாகியுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

### நீர்வீழ்ச்சியின் பின்னணி

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்லேவல நீர்வீழ்ச்சி கடந்த 2022 செப்டெம்பர் 06ஆம் திகதிமுதல் சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ள மிக அழகிய நீர்வீழ்ச்சியான எல்லேவல நீர்வீழ்ச்சியைக் காணவும் அங்கு நீராடவும் தினமும் ஏராளமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்வது வழக்கம்.

அண்மையில் நீர்வீழ்ச்சியில் நீராடச்சென்று சிறு பிள்ளைகள் உட்பட பலர் உயிரிழந்ததையடுத்து எல்லேவல நீர்வீழ்ச்சியில் சுற்றுலாப் பயணிகளுக்கு தடைவிதிக்க வெல்லவாய பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

இந்நிலையில், கடந்த 2022 மார்ச் 3ஆம் திகதிமுதல் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த எல்லேவல நீர்வீழ்ச்சி செப்டெம்பர் 06 முதல் மீண்டும் திறக்கப்பட்டிருந்தது. தற்போது அருவியைச் சுற்றி பாதுகாப்புக்கயிறுகள் அமைக்கப்பட்டு, அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்பாக நீர்வீழ்ச்சியைப் பார்வையிடுமாறும் வெல்லவாய பிராந்திய சுற்றாடல் குழு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்நிலையில், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக பாரிய செயற்றிட்டங்கள் அங்கு செய்யப்பட்டிருந்த நிலையில் இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளமை அப்பகுதி மக்களையும் கல்முனை பிரதேச மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# 159 வருட பொலிஸ் வீரர் தினம் அம்பாறையில் அனுஷ்டிப்பு





(பாறுக் ஷிஹான்)

159 வருட பொலிஸ் வீரர் தினம் அம்பாறை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்றதுடன், இத்தினத்தையொட்டி பொலிஸ் திணைக்களம் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடுசெய்துள்ளது.

இதன்போது மௌன அஞ்சலியைத் தொடர்ந்து பொலிஸ் கொடி ஏற்றப்பட்டதுடன், பொலிஸ் நினைவுத் தூபிக்கு விசேட பொலிஸ் மரியாதை மற்றும் மலர் வளையம், மலர் கொத்துகள் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரட்நாயக்க கலந்துகொண்டு பொலிஸ் கொடியை ஏற்றி அரைக்கம்பத்தில் பறக்கவிட்டார்.

தொடர்ந்து உயிரிழந்த அத்தனை பொலிஸ் உத்தியோகத்தர்களையும் நினைவுகூர்ந்து அகவணக்கம் இடம்பெற்றதுடன், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் முன்னாலுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத் தூபிக்கருகில் பூச்செண்டுகள் வைக்கப்பட்டு நினைவுகூரப்பட்டன.

மேலும் அம்பாறை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.பி.எச்.செனவிரத்ன, அம்பாறை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அசேல ஹேரத், அம்பாறை மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், நாட்டிற்காக உயிர்நீத்த பொலிஸ் வீரர்களின் உறவினர்கள், அங்கவீனமுற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்ற மற்றும் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உயிர்நீத்த பொலிஸாரின் உறவினர்களின் நலன்களை ஆராயும் செயற்பாடும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்நாயக்கவினால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நெகிழ்ச்சி சம்பவமொன்றும் பதிவாகியிருந்தது. நினைவுத் தூபிக்கு மலர் கொத்து வைக்க வந்திருந்த அக்கரைப்பற்று பகுதியை சேர்ந்த முஸ்லிம் பெண்மணி ஒருவர் நீண்டநேரம் குறித்த நினைவுத் தூபி அருகில் மற்றுமொருவரின் துணையுடன் நின்றுகொண்டு உயிரிழந்த தனது பொலிஸ் மகனின் பெயரை தேடிப்பார்த்து அழுததைக் காணமுடிந்தது.

# மொரவெவ பிரதேச சபை உறுப்பினர் மீது வாள்வெட்டு தாக்குதல்: சந்தேக நபர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, மொரவெவ பிரதேச சபை உறுப்பினரொருவர் வாள்வெட்டுத் தாக்குதலினால் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை (21) மாலை இடம்பெற்றுள்ளது. மொரவெவ - நாமல்வத்த பகுதியைச் சேர்ந்த எம்.எப்.அஹ்மீர் (40 வயது) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.


சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பிரதேச சபை உறுப்பினரைத் தாக்கிய சந்தேக நபர் முச்சக்கரவண்டியில் வருகை தந்துள்ள நிலையில் தப்பியோடியுள்ளார். அரசியல் கூட்டம் ஒன்றிற்கு சென்று வீடு திரும்பிகொண்டிருந்தவேளை முச்சக்கர வண்டியில் வருகை தந்த குறித்த சந்தேக நபர் பிரதேச சபை உறுப்பினரை வாளால் வெட்டியது ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்கான குறித்த பிரதேச சபை உறுப்பினர், 1990 வாகனம் மூலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன் நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது. சம்பவம் குறித்து மொரவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் குறித்த சந்தேக நபர் நேற்று கைதுசெய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

போதைப்பொருள் பாவனையின் தீமைகளை வெளிப்படுத்தி விழிப்புணர்வூட்டும் வகையிலமைந்த வீதி நாடகம் ''போதைப்பொருள் பாவனை இல்லாத இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவோம்'' எனும் தொனிப்பொருளின் கீழ் உறுதியுரை ஏற்றலும் கிராம இளைஞர், யுவதிகளின் முழுப் பங்கேற்புடன் கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்படுவதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

பிரதேச இளைஞர், யுவதிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு செவ்வாய்க்கிழமை (21) மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா, பன்சேனை ஆகிய கிராமங்களில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அனுலா அன்ரன், கண்காணிப்பு மற்றும் மீளாய்வு இணைப்பாளர் எஸ்.ஜோன்சன், இணைப்பாளர் ரீ.ஆர்.மார்ஷல் மற்றும் அலுவலர்களான ஜி.நிதுஷ்காந்த், ஏ.அபிலாஷினி உட்பட இளைஞர் கழகத் தலைவர்களான எஸ்.பிரவீனா, ரீ.சஞ்சீவ், கே.டிலோஜினி உட்பட கிராம மக்களும் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவி லுள்ள அனைத்துக் கிராமங்களிலும் முன்னெடுக்கப் படவுள்ள இந்தப் போதைப்பொருள் மற்றும் மதுசாரப் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரம் தமது சொந்த சமூகத்திலிருந்தே செயற்படுத்தும் நோக்கத்துடன் தொடுவானம் இளைஞர் கலைக் கழகத்தினால் விழிப்புணர்வு நாடகங்கள் வடிவில் அரங்கேற்றப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பாரம்பரிய வைத்தியர்களுக்கான பயிற்சி செயலமர்வு



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

கொழும்பு சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட, பாரம்பரிய வைத்தியர்களுக்கான 5 நாள் பயிற்சி செயலமர்வின் ஆரம்பநாள் நிகழ்வு திங்கட்கிழமை (20) மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு சித்த தள ஆயுர்வேத வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

கொழும்பு சுதேச வைத்தியப் பிரிவின் தலைவர் பி.தயாநந்தன் தலைமையில் ஆரம்பமான இச்செயலமர்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல், அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் வைத்தியர் சி.சிவகுமார், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட வைத்தியர்களும் கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஆரம்பநாள் பயிற்சியின் வளவாளர்களாக வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் கலந்துகொண்டு, பாரம்பரிய மருத்துவத்தின் வரலாறும், இன்றைய நிலை பற்றி தெளிவான விளக்கப் பயிற்சியினையும், வைத்தியர் எம்.ஏ.நபீலினால் இன்றைய உணவு முறைகளும் அதன் ஆரோக்கியம் பற்றிய விளக்கப்பயிற்சியினையும் வழங்கினர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்களின் அறிவுத்திறன்களை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களின் வைத்திய முறைகளை எவ்வாறு கடைப்பிடித்துச் செல்லவேண்டும் என்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

# போடியார் புலம்பல்!



வாரிசு அரசியல் முடிந்துவிட்டது. நாமல் வேற வேல தேடவேண்டும் எண்டு அந்த மஹிந்த கொம்பனிக்கு கடந்த காலம் சாமரை வீசிய விமல் வீரவங்ச இப்ப சொல்லுறாரு எலுவா..? ஏனாண்டாம்பி வேறவேல கடந்த 2009இல் வன்னியில இருந்து சுருட்டிய தங்கம் காசி கொள்ளையடித்த சொத்துகள் எல்லாத்தையும் எடுத்து வெளிநாடுகளில் நாமலிட அப்பா, சித்தப்பா, பெரியப்பா எல்லாரும் முதலீடு செய்திருக்காங்க எலுவா? அதால மஹிந்த குடும்பத்திட வாரிசுகள் இன்னும் நூறு வருஷம் சோக்கா வாழலாம். இந்த நாசமத்த அரசியல் அவங்களுக்கு தேவல்ல.

# பழைய மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் கலந்துரையாடல்




(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஜலால் வித்தியாலயத்துக்கு இவ்வருடம் தரம் - 01இற்கு புதிய மாணவர்களின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் PAST PUPILS' ASSOCIATION எனும் பழைய மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸின் நெறிப்படுத்தலில் தலைவரும் பாடசாலையின் அதிபருமான எம்.ஐ.எம்.சைபுடீன் தலைமையில் பாடசாலை நூலக மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி என்.எம்.மலிக் கலந்துகொண்டு காத்திரமான கருத்துகளை முன்வைத்தார். இதன்போது சாய்ந்தமருதிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், முன்னாள் அதிபர் எம்.எம்.இஸ்மாயில், பிரதேச கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் அமைப்பின் உயர்மட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை முன்வைத்தனர்.

பாடசாலைக்கு இன்னும் வலுவூட்டி, கடந்தகாலங்களில் இப்பாடசாலையிலிருந்து சக்திவாய்ந்த தலைவர்கள் உருவானதுபோன்று எதிர்காலத்திலும் சிறந்தவர்களை உருவாக்கி கற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கும் அமைப்பின் உயரிய நோக்கத்தின் கீழ் இவ்வாறான சந்திப்புகள் மற்றும் முன்னெடுப்புகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாம் இறப்பதற்கு முன்னர் எமது பிள்ளைகளைக் காணவேண்டும்

## திருமலை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர் கோரிக்கை

(அப்துல்சலாம் யாசீம்)

தனது பிள்ளைகளையும் கணவரையும் இழந்து அவர்கள் வந்துசேர்வார்கள் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புகளுடனும் 150இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். ஆகவே நாங்களும் இறப்பதற்கு முன்னர் எமது பிள்ளைகளைக் காண வேண்டும் என்ற ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதனால் எமக்கு நீதியே வேண்டும் - நிதி வேண்டாம் - என திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர் சங்கத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை கப்பல்துறை பகுதியில் செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

எட்டு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இணைந்து உறவுகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம். உலக நாடுகளே



எமக்காக குரல் கொடுக்க வேண்டும். ஐ.நா. கூட்டத்தொடரின்போது எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற விடயம் குறித்தும் பேசப்பட வேண்டும். இம்முறை சிறந்த தீர்வினைப் பெற்றுத்தர வேண்டுமென தான் கோரிக்கை விடுப்பதாக அமைப்பின் செயலாளர் செல்வராசா கைரலி தெரிவித்தார்.

மேலும் அவ்வமைப்பின் தலைவி செபஸ்டின் தேவி தெரிவிக்கையில், ஐ.நாவில் 52ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்று வருகின்ற நிலையில் இம்முறை அங்கே சென்று குரல் எழுப்பமுடியாத நிலையிலுள்ள நாம் அதனாலேயே இங்கிருந்து சர்வதேச சமூகத்திற்கு இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம்.

13, 14 வருடங்களாக எங்களுடைய பிள்ளைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். இவர்கள் குறித்து இலங்கை அரசாங்கம் எந்தவிதத் தீர்வினையும் பெற்றுத்தரவில்லை. இரண்டு தடவைகள் நாங்கள் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு வருகை தந்து எமது பிரச்சினைகளைக் கூறினோம். ஆனாலும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. இருந்த போதிலும் இம்முறை எமக்கு ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்திற்கு வருகை தர முடியாத நிலையில் அங்குள்ளவர்கள் எமக்கு ஐ.நாவிடம் நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம். இம்முறையாவது எமக்கு தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம் - என்றார்.

# கெப்டனானார் கிலியான் எம்பாப்பே



(ரமணி)

பிரான்ஸ் உதைபந்தாட்ட அணி கெப்டனாக பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் முன்கள வீரர் கிலியான் எம்பாப்பே நியமிக்கப்பட்டுள்ளதாக பிரெஞ்சு ஊடகங்கள் திங்களன்று செய்தி வெளியிட்டுள்ளன. உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் பின்னர் ஹ்யூகோ லோரிஸ் ஓய்வுபெற்ற பின்னர் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சியாளர் டிடியர் டெஷாம்ப்ஸுடன் பேசிய பிறகு எம்பாப்பே கெப்டன் பதவியை ஏற்றுக்கொண்டதாக பிரெஞ்சு விளையாட்டு நாளிதழ் தெரிவித்துள்ளது. கிலியான் எம்பாப்பேவுக்கு ஆதரவாக பிரான்ஸ் கெப்டன் பதவியை எதிர்பார்த்த அன்டோயின் க்ரீஸ்மேன் அதிருப்தியடைந்து வேதனையடைந்தார். லெஸ் ப்ளூஸ் பயிற்சியாளர் டிடியர் டெஷாம்ப்ஸ் அன்டோயின் கிரீஸ்மானை விட எம்பாப்பேவை விரும்பினார்.

பிரான்ஸ் முதன்முதலாக உலகக்கிண்ண சம்பியனான 1998ஆம் ஆண்டு எம்பாப்பே பிறந்தார். கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் ரசிகன். 16ஆவது வயதில் கிளப் அணிகளுக்காக விளையாட ஆரம்பித்தார். கெமரூன் நாட்டைச் சேர்ந்த இவரது தந்தை உதைபந்தாட்டப் பயிற்சியாளர். தாய் கான்ட் போல் வீராங்கனை. யூரோ 2024 தகுதிச் சுற்றில் அடுத்த வாரம் நெதர்லாந்து , அயர்லாந்து குடியரசு ஆகியவற்றுடன் பிரான்ஸ் விளையாடவுள்ளது.

# விஸ்டன் அணியில் இரு இலங்கையர்கள்




கிரிக்கெட் உலகில் மிகப் பிரபல்யமாக காணப்படும் விஸ்டன் சஞ்சிகையானது இரண்டாவது பருவத்திற்கான ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் சிறப்பாக செயற்பட்ட வீரர்களைக்கொண்டு, ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் சிறந்த பதினொருவர் அணியை வெளியிட்டுள்ளது.

வெளியிடப்பட்டிருக்கும் விஸ்டன் பதினொருவர் அணியில் இலங்கையைச் சேர்ந்த இரண்டு வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அதன்படி திமுத் கருணாரட்ன மற்றும் தினேஷ் சந்திமால் ஆகிய இருவருமே இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இதில் திமுத் கருணாரட்ன அணியின் ஆரம்ப வீரர்களில் ஒருவராக பெயரிடப்பட்டிருக்கின்றார். ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் இரண்டாவது பருவத்திற்காக 12 போட்டிகளில் ஆடியிருக்கும் அவர், 47.90 என்கிற துடுப்பாட்ட சராசரியுடன் 1054 ஓட்டங்களைக் குவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்குள் 2 சதங்களும், 8 அரைச்சதங்களும் அடங்குகின்றன. தினேஷ் சந்திமால் நான்காம் இலக்கத்தில் துடுப்பாடும் வீரராக அணியில் இடம்பெற்றிருக்கின்றார். தினேஷ் சந்திமால் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் 10 போட்டிகளில் ஆடி 68.42 என்கிற துடுப்பாட்ட சராசரியுடன் 958 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி 'Century Cup' 2017 அணி வசம்



(மீராவோடை செய்தியாளர்)

ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் 106ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடர் அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தலைமையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் 2006 மற்றும் 2017ஆம் ஆண்டுகளின் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்ற அணிகள் மோதிக்கொண்டன.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 2006 அணியினர் 10 ஓவர்கள் முடிவில் 07 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய 2017 அணியினர் 09 ஓவர்கள் முடிவில் 05 விக்கெட்டுகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டனர்.

இறுதிப் போட்டியில் ஆட்டநாயகனாக 2017 அணி வீரர் இன்ஷாப் தெரிவுசெய்யப்பட்டதுடன், தொடர் ஆட்டநாயகனாக 2017 அணி வீரர் நிஷாத், சிறந்த களத்தடுப்பு 2004 அணி வீரர் ஜலால்தீன், சிறந்த பந்து வீச்சு 2017 அணி வீரர் ஆஷிக், சிறந்த துடுப்பாட்ட வீரர் 1998 அணி வீரர் முஹம்மது அலி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன், சுற்றுத் தொடரின் நன்னடத்தை அணியாக 2001 அணியும், சாதனைகள் பல நிகழ்த்திய அணியாக 1998 அணியினரும் தெரிவுசெய்யப்பட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், அதிதிகளாக பாடசாலையின் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்களான ஏ.எம்.ஏ.காதர், எம்.சி.எச்.முஹம்மட், ஐ.எல்.மஹ்றூப், எம்.எல்.ஏ.ஜுனைத் மற்றும் இச்சுற்றுத் தொடரை வெற்றிகரமாக நடத்தி முடிக்க முழு அனுரணை வழங்கிய ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் பழைய மாணவ அதிதிகளும் கலந்து கிண்ணங்களை வழங்கினர்.

# வெற்றிவாகை சூடியது கல்முனை Legends அணி





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரான அமரத்துவமடைந்த சீனித்தம்பி பேரின்பமின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட T-10 கடினபந்து சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் கல்முனை Legends அணியினர் வெற்றிபெற்றனர்.

கல்முனை Legends அணியுடன் சாய்ந்தமருது Flying Horses அணியும் மோதிய இப்போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சாய்ந்தமருது Flying Horses அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 10 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 69 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்முனை Legends அணியினர் 7.03 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். சிறப்பாக விளையாடிய கல்முனை Legends அணியினர் மேலதிக 6 விக்கெட்டுகளால் வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கி வெற்றிவாகை சூடிக்கொண்டனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஏ.எல்.எம்.அஸீம் தெரிவானார். லயன் எஸ்.நேசராஜாவின் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில், இவ்வாண்டு காரைதீவிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்விற்கு கவீந்திரன் கோடீஸ்வரன் பிரதம அதிதியாகவும் எந்திரி என்.சிவலிங்கம் முதன்மை அதிதியாகவும், பேரின்பம், சாரதாதேவி ஆகியோர் நட்சத்திர அதிதிகளாகவும் ஜெயசிறில் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 18 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் 10 இடங்களுக்கு வெளியே நடால்



ஏடிபி தரவரிசையில் இந்தியன் வெல்ஸ் வெற்றிக்குப் பிறகு கார்லோஸ் அல்கராஸ் முதலிடத்தைப் பிடித்தார். அதேநேரத்தில் ரஃபேல் நடால் 18 ஆண்டுகளில் முதல் 10 இடங்களிலிருந்து வெளியேறினார்.

அமெரிக்க டெய்லர் ஃபிரிட்ஸ் தனது தலைப்பு பாதுகாப்பு காலிறுதியில் முடிவடைந்த பின்னர் ஐந்து இடங்களை வீழ்த்தி உலக 10ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். அவுஸ்திரேலிய ஓபனில் இரண்டாவது சுற்றில் வெளியேறியதிலிருந்து காயமடைந்த நடால், 13ஆவது இடத்திற்கு சரிந்தார்.

22 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியனான இவர் இதற்கு முன் ஏப்ரல் 2005 முதல் 10 இடங்களுக்குள் இருந்தார். 17.5 வருடங்கள் 912 வாரங்கள் 6384 நாட்கள் 153,216 மணித்தியாலங்கள் 9,192,960 நிமிடங்களுக்குப் பிறகு 10ஆவது இடத்துக்கு வெளியே தள்ளப்பட்டார்.

ஏடிபி முதல் 5

கார்லோஸ் அல்கராஸ் (ESP) 7,420 புள்ளிகள் (+1)

நோவக் ஜோகோவிச் (SRB) 7,160 (-1)

ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ்(GRE) 5,770

காஸ்பர் ரூட் (NOR) 5,560

டேனியல் மெட்வெடேவ் (RUS) 4,330 (+1)

# குத்துச்சண்டைப் போட்டியில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் சாதனை









நுவரெலியா சினிசிட்டா உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற நுவரெலியா கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை 05 தங்கம் பதக்கங்களையும் 01 வெள்ளி பதக்கத்தையும் 02 வெண்கல பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

(தலவாக்கலை நிருபர்)

# அக்குறணை அஷ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் ரோசஸ் இல்லம் சம்பியன்





அக்குறணை அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலையின் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி எஸ்.ஏ.எவ்.ஜிம்னாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல தொழிலதிபர் எம்.எஸ்.சனீர் முஹம்மட் கலந்துகொண்டார். மேலும் விசேட அதிதிகளாக அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர்களான திருமதி எம்.இஸட்.எஸ்.வஸீலா, என்.எம்.சித்தி பரீதா உட்பட இன்னும் பல முக்கிய அதிதிகளும் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் மூன்று இல்லங்கள் கலந்துகொண்டதோடு, லோட்டஸ் இல்லம் 415 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் ஓக்கிட் இல்லம் 433 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றதுடன், ரோசஸ் இல்லம் 498 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

# மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு இல்ல விளையாட்டுப் போட்டியில் கார்னட் இல்லம் சம்பியன்





எம்.எஸ்.அமீர் ஹூசைன்

பதுரியா மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கல்லூரி மைதானத்தில் அதிபர் ஏ.எல்.ஏ.அப்துர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கம், பழைய மாணவியர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, கல்லூரி ஆசிரிய குழாம், கட்டிட அபிவிருத்தி நிதியம் உட்பட அனைவரதும் ஒத்துழைப்புடன் இந்த விளையாட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக மாவனல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.ஏ.பி.பிரியதர்ஷினி, திருமதி நிரோஷா பெர்னாண்டோ பிரதி பணிப்பாளர் டீ.பி.வேகந்தல, முன்னாள் அதிபர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

நான்கு இல்லங்களைக்கொண்ட இந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் கார்னட் இல்லம் 444 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. இரண்டாம் இடத்தை 422 புள்ளிகளுடன் சபையர் இல்லமும் மூன்றாம் இடத்தை சமமான புள்ளிகளுடன் ரூபி மற்றும் எமரால்டு இல்லங்களும் பெற்றுக்கொண்டன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7